விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 09 வியாழக்கிழமை (24.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

## 25 வயது இளைஞனுக்கு உடுவிலில் கொரோனா

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கொத்தணியில் உடுவிலைச் சேர்ந்த 25 வயது இளைஞன் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ 19

## அரசியல் கைதிகளுக்கு திட்டமிட்டு கொரோனா பரப்பப்பட்டதா?

### உறவுகள் சந்தேகம்

### விடுதலைக்கு அணி திரளவும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனாவுடன் போராடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளது விடுதலைக்காக இன, மத, அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி 19

### சதத்தை கடந்த மருதனார்மடம் கொத்தணி

# 9 பேருக்கு நேற்று யாழில் தொற்று

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் நேற்றும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் கொரோனா கொத்தணியுடன் தொடர்புபட்ட 9 பேர் நேற்று யாழில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் மருதனார்மடம் கொத்தணியால் பாதிக்கப்பட்டோர் எண் ணிக்கை 104ஆக உயர்வடைந்துள்ளது.



(19ஆம் பக்கம் பார்க்க)

## பாணந்துறை ஆடைத் தொழிற்சாலையில் 80 பேருக்கு தொற்று உறுதி

9ஆம் பக்கம் பார்க்க

## பண்டிகை நாட்களில் மதுச்சாலைகள் மூடப்படாது

கலால் திணைக்களம்

9ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் போல முஸ்லிம்களை கையாள வேண்டாம்

அரசை எச்சரிக்கும் ஞானசார தேரர்

12ஆம் பக்கம் பார்க்க

## பாரவூர்தி சாரதிக்கு கிளிநொச்சியில் கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மேலும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் ஆண் ஒருவருக்கும் என இரண்டு பேருககே 19

## கொரோனாவால் மேலும் ஒருவர் மரணம்

### நேற்றும் +579 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான 71 வயதுடைய ஒருவர் 19

## இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை

### பிரிட்டன் தூதுவர், ஐ.நா பிரதிநிதியுடன் சுமந்திரன் எம்.பி நேற்று பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் கொண்டு வரப்படவுள்ள புதிய பிரே 19

### யாழ்.மாநகர சபை, நல்லூர் பிரதேச சபையில்

## தோற்கடிக்கப்பட்டவர்கள் களமிறங்கினால் காங்கிரஸ் ஆதரவு வழங்காது

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையில் 2021ஆம் ஆண்டு பாதீடு தோற்கடிக்கப்பட்டு பதவியிழந்த முதல்வரை 19

## மருதனார்மடம் வைரஸ் வீரியமானது வீட்டில் பண்டிகையைக் கொண்டாடுங்கள்

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமூகப் பொறுப்புடன் வீட்டிலிருந்து அமைதியாக பண்டிகைகளை கொண்டாடுவோம் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எதிர்வரும் நாட்களில் கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட பண்டிகைகள் கொண்டாடப்பட இருக்கின்றது. 19

### அனைவருடன் பேசிய பின்பே

## இறுதிச் சடங்கு பற்றி தீர்மானிக்க வேண்டும்

### ஐ.தே.க தலைவர் ரணில்

(கொழும்பு)

கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் இறுதிச் சடங்கு போன்ற ஒரு 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தீர்மானமின்றி கூட்டம் நிறைவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வேட்பாளரைத் தெரிவு செய்யும்கூட்டம் முடிவு எதுவும் எட்டப்படாமல் முடிவடைந்துள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்யாழ் மாநகரசபை முதல்வர் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் - மார்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



PHYSICS ONLINE CLASSES
MCQ மீது கவனம் செலுத்தும் மாணவர்கள் இலகுவாக புள்ளிகளை பெறக்கூடிய Essay வினாக்களை கவனிப்பதில்லை.
20 வருட கடந்தகால 160 Essay வினாக்கள், நாளுக்கொரு Essay வினா வீதம் (அதற்குரிய பாடக்குறிப்புடன்)
7 மாதத்தில் அனைத்தும் செய்து முடிக்கப்படும்.
நேரம் இரவு 10 மணி (ஞாயிறு தவிர்ந்து)
C. THIVYAN B.Sc, PGDE
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
074 136 5446
(C-1007)


## பெயர் மாற்றம்

3ஆம் ஒழுங்கை, கதிரேசு வீதி, வைரவ புளியங்குளம், வவுனியாவில் வசிக்கும் பிரான்சிஸ் ஜெயசீலன் மார்க் மிதிலன் ஆகிய நான் எனது பெயரை இன்றில் இருந்து பிரான்சிஸ் ஜெயசீலன் மார்க் மிதுலன் என சகல ஆவணங்களிலும் மாற்றம் செய்கின்றேன்.

இங்ஙனம்
பிரான்சிஸ் ஜெயசீலன் மார்க் மிதுலன்

(5043)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்களான
திரு. நி. கஜிதரன், திரு. நி. பாபுதரன் ஆகியோரின் அன்புத் தந்தையார்

அமரர் **கந்தசாமி நித்தியானந்தன்**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், பணியாளர்கள்
பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம் , சுன்னாகம்.
பாரதி கல்வி நிலையம் - சித்தன்கேணி.

(C-1004)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **ந. தயானந்தன்** அவர்களின்
பாசமிகு தாயார்

திருமதி
**கமலாம்பிகை கனகசபை**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - கொக்குவில்

(C-1003)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



நன்றி மறவோம் என்றென்றும்

அமரர்
**தவேந்திரன் தனிஸ்ரன் [தனுஸ்]**

மலர்வு
2000.10.13

உதிர்வு
2017.12.24

2017.12.24 அன்று அகால மரணமடைந்த தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்) அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இவரின் பிரிவுத்துயர் கேட்டு (24.12.2017) சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகைதந்த பொதுமக்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், வைத்திய அதிகாரிகள், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களது பண்டிகைக்கால கொண்டாட்டங்களைத் தவிர்த்து எம் செல்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிலையத்தினர், பொதுமக்கள், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள், முல்லை மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், புதுக்குடியிருப்பு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாதைகள் அச்சிட்டவர்கள்,வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்தி தெரிவித்தவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், உணவு தந்து உதவிய உறவுகள், நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் அனைத்தையும் தாங்களே செவ்வனே செய்து முடித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனிஸ்ரன் பல்பொருள் வாணிபம்,
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு.
077 276 8570

(C-1006)

# இனிப்பு உணவுகளால் ஆபத்து

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் பண்டிகை காலப்பகுதியில் முடிந்தளவு இனிப்பு உணவுகளை உட்கொள்ளாமல் நோய் எதிர்ப்பு சக்திகளை அதிகரிக்கும் உணவுகளை உட்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் விசேட வைத்தியர் ஷாந்தி குணவர்தன மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.**

கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவும் இந்த சந்தர்ப்பத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தால் அதன் மூலம் உடலுக்குக் கொரோனா கடுமையான பாதிப்பு ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக இனிப்பு சுவை அதிகமான உணவுகள் மூலம் உடலுக்கு நீரிழிவு நோய் ஏற்படுத்தும் என்பதனால் அது கொரோனா வைரஸ் தொற்றிற்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்தும் என அவர் கூறியுள்ளார்.

நீரிழிவு உட்பட பல நோய்களினால் பாதிக்கப்படும் நபர்கள் தங்களின் நோய் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக வைத்திய ஆலோசனைக்கமைய மருந்து பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய விசேடமாக புதிய மரக்கறிகள் மற்றும் பழவகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளுமாறும் அவர் நாட்டு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-4)

# சரத் வீரசேகர - சுசில் பிரேமஜயந்த மோதல்





(கொழும்பு)


தமிழ் மக்களுக்கு எதிராக கடுமையாக இனவாதம் பேசி வரும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர, அமைச்சர் சட்டத்தரணி சுசில் பிரேமஜயந்தவுடன் முரண்பட்டுள்ளார்.


குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் கைது செய்யப்படுகின்றவர்களின் புகைப்படங்களை ஊடகங்களுக்கு வெளியிட வேண்டும் என சரத் வீரசேகர அண்மையில் வெளியிட்ட கருத்தொன்றுக்கு எதிராக இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி சுசில் பிரேமஜயந்த கடும் எதிர்பபை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்படுகின்ற சந்தேக நபர்களின் புகைப்படங்களை ஊடகங்களுக்கு வெளியிட அனுமதிக்கின்ற சட்டத்திருத்தத்தை விரைவில் கொண்டுவருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் அமைச்சரின் இந்தக் கருத்தானது அரசியலமைப்பினை அப்பட்டமாக மீறும் விடயமாகும் என ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டபோது இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார். (நி-4)

# உரிய தீர்வு வழங்காவிட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டம் தொடரும்





(கொழும்பு)

முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்யும் விடயத்தில் உரிய தீர்வை இந்த அரசு தராவிட்டால், அரசுக்கு எதிரான அமைதிப் போராட்டம் ஜனநாயக முறையில் நாடு தழுவிய ரீதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொவிட்-19 காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு எதிராக நேற்றுப் புதன்கிழமை காலை கொழும்பு - பொறளை பொது மயானத்துக்கு முன்பாக இடம்பெற்ற அமைதி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாஸா எரிப்பு விடயத்தில் உரிய தீர்வை இந்த அரசு தராவிட்டால் அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைதியான உரிமைப் போராட்டம் நாடு தழுவிய ரீதியில் தொடரும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இந்த ஈனச் செயலை சர்வதேசமயப்படுத்தி இதற்கான தக்க பாடத்தைப் புகட்டுவோம் என மேலும் தெரிவித்தார். (நி-4)

# இரணைதீவு மக்கள் எதிர்நோக்கும் சவால்கள்

## கவனயீர்ப்புப் போராட்டம்

(முறிகண்டி)

கிளிநொச்சி இரணைதீவு மக்கள் எதிர்கொள்ளும் சவால்களிற்கு தீர்வு பெற்று தருமாறு கோரி பூநகரியில் கவனஈர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டதுடன், பிரச்சினைகள் அடங்கிய மகஜரும் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்பு போராட்டம் யாழ்.மன்னார் வீதி ஊடாக பூநகரி பிரதேச செயலகம் வரை சென்று பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்ணேந்திரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இதன்போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த மக்கள்,

இரணைதீவிற்கு சீமெந்து உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் செல்ல கடற்படையினர் அனுமதிப்பதில்லை எனவும் பெண்கள் இரணைதீவிற்கு செல்வதை கடற்படையினர் தடுத்து வருவதாகவும் இரணைதீவில் அமைக்கப்பட்ட மின் கம்பங்களை தமது பாதுகாப்பு தேவைகளிற்காக பயன்படுத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.





இவ்வாறான நிலையிலிருந்து தமது தீவிற்கு சுதந்திரமாக சென்றுவர அனுமதிக்குமாறும் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (5-4-100)

# சிறைச்சாலைக் கொத்தணியில் இதுவரை 3 ஆயிரத்துக்கு மேல் தொற்று

(கொழும்பு)

சிறைச்சாலைகள் கொத்தணியில் இதுவரை 3,579 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் சிறைச்சாலை கொத்தணியில் 141 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய மகசின் சிறைச்சாலையிலிருந்தே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

அதன்படி இதுவரை 822 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் 810 பேருக்கும் மகர சிறைச்சாலையில் 735 பேருக்கும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 389 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் அதிகாரிகள் 116 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# சுமார் 27 இலட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 12 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த 1250 குடும்பங்களுக்கு 27 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொதிகள் ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் நா.சுந்தரராசா தலைமையிலான குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டது.

இப்பொதிகள் விநியோகத்திற்கான நிதியினை கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினர் வழங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-106)



# மன்னார் மீனவர்களின் வாழ்விற்கு விடிவு கிடைக்குமா?

(மன்னார்)

பல வருடங்களை கடந்து நாங்கள் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். இன்று அதற்காக போராட வேண்டிய நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமகாலத்தில் வட மாகாணத்தில் குறிப்பாக மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட "புரேவி" புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் சில கிராமங்களில் இன்னும் உரிய அதிகாரிகளும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

குறித்த பிரதேசங்களில் கடல் நீர் உட்புகுந்தது. மீன் பிடிக்க பயன்படுத்தப்பட்ட மீன் பிடி உபகரணங்கள், படகுகள் படகுவெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள் என்பன சேதமடைந்துள்ளன.

மீன்பிடி சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் இந்திய மீனவர்களின் வருகையால் பல பிரச்சினைக்கு முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம்.

பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல விட்டுக்கொடுப்புக்கள் இடம் பெற்றது. இறுதியாக 2016 பேசப்பட்டு அவர்களால் முன்வைக்கப்பட்ட ஆண்டுகளும் நிறைவடைந்து இன்று அதற்காக போராட வேண்டிய நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

சட்டங்கள் உருவாக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்த அரசு தயங்குகிறது.

குறிப்பாக வளங்களை பொறுத்தமட்டில் மீன்பிடியோடு கரையோரங்களும் இன்று பல தேசியக் கம்பனிகளால் சூறையாடப்படுகின்றன.

எனவே மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மீனவ சமூகத்தின் வாழ்விற்காக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் தெரிவித்தனர். (நி-4-285)

To The Members of the Alumni Faculty of Medicine, Jaffna.

**POSTPONEMENT OF ANNUAL GENERAL MEETING**

The annual general meeting (AGM) of the Alumni Faculty of Medicine Jaffna scheduled to be held on the 30th December 2020 (Wednesday) is postponed due to unavoidable circumstances. The new date will be notified later.

Vinayagamoorthty Elankumar
Secretary,
The Alumni Faculty of Medicine, Jaffna. (5042)

## மரண அறிவித்தல்



**சிவபாக்கியம் சிவப்பிரகாசம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை - இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

யாழ். அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் சிவப்பிரகாசம் நேற்று (23.12.2020) புதன்கிழமை சுன்னாகத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் சேதுநாயகம் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஸ்ரீ பாலகிருஷ்ண மூர்த்தி, திரிபுவனேஸ்வரி, திலகவதி அவர்களின் அன்புச் சகோதரியும் பத்மலோசினி, கணேசன், சிங்கமாப்பாணர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஜன் (லண்டன்), சிவநந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் காலஞ்சென்ற சுதாகரன், சுஜீதரன், நந்தன், சுகந்தன், கஸ்தூரி, கரிகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் இனியா, ஈசன், யஸ்வினி, ஆதிரன், அஞ்சயன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ரேணி, சிவரூபி, சுதாகர், சஞ்சீவன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2020) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திலகவதி - சகோதரி (இலங்கை) : 0094 77 923 1747
கஜன் - மகன் (லண்டன்) : 0044 76 960 13222

தகவல்:- திருமதி யசிந்தா ஜெயநாதன் (மகள்)

## வலம்புரி 21 ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்துச் செய்திகள்



**புதிய பொலிவுடன் வெளிவரும் வலம்புரி பத்திரிகை**

தமிழ் பேசும் மக்களின் தலை சிறந்த நடுநிலையான நாளிதழான "வலம்புரி" உண்மைச் செய்திகள், அரும்பெரும் தகவல்கள், தத்துவங்கள் வரலாறு, கல்வி.மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகள் மட்டுமல்லாது விசேடமாக தென்னைச் செய்கையாளர்களுக்கு தென்னை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்கு முன்னின்று உழைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக கடந்த பல வருடங்களாக முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. "வலம்புரி" புதிய பொலிவுடன் இருள் அகன்று கதிரவன் வெளிவருவதற்கு முன்பே மக்களின் கைகளில் கிடைக்கும் இந் நாளிதழின் மகத்தான சேவை மேலோங்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**ஜெ.சத்தியேந்திரன்,
உதவிப் பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,
நல்லூர், பளை.**



**நன்நெறி காக்கும் நல்லதோர் நாளேடு வலம்புரி வாழியவே!**

நாராயணன் திருக்கரத்தில் இருக்கும் பாஞ்ச ஜன்யத்தின் ஒலி பாரதப் போரை நடத்தி தர்மத்தை காத்தது போல். நடுநிலை தவறாது நன்னெறி காத்து நல்லதோர் நாளேடாக வலம்புரி மேன்மையுற எனது குலதெய்வம் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளை வேண்டுவதோடு இருபத்திரண்டாம் அகவையில் வீறுநடை போட்டிட ஆசிகளும் வாழ்த்துக்களும்.

**கலாநிதி. கலாபூஷணம்.க.லோகேஸ்வரன்,
தொல்புரத்தூர்.**

# மரண பரிசோதகர்களுக்கு வெற்றிடம்

(கொழும்பு)

நாடு முழுவதும் நிலவும் மரண பரிசோதர்களுக்கான பற்றாக்குறையை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 302 திடீர் மரண பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக நீதி அமைச்சு அறிக்கையூடாக தெரிவித்துள்ளது.

காலதாமதமின்றி சேவைகளை வழங்குவதற்காக உடனடியாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில், வெற்றிடங்கள் தொடர்பில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு Online ஊடாக தகுதி வாய்ந்தோர் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)



பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவின், வழிகாட்டுதலுடன் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கிறிஸ்தவ ஆடை (கார்டினலின் அங்கி) யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்திஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதனால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# விவசாய நிலங்களுக்கு வாய்க்கால் அமைத்து தருமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பாண்டியன்குளம் கமநலசேவை நிலையப்பிரிவிற்குட்பட்ட மூப்பங்குளத்தின் கீழுள்ள வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசன வாய்க்கால்களை அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மாந்தை கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலேயே விவசாயிகள் இக்கோரிக்கையினை முன்வைத்தனர்.

இது தொடர்பில் விவசாயிகள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மூப்பங்குளத்தின் கீழ் முன்பு 15 ஏக்கரில் விவசாய நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தோம்.

பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில், குளம் சீரமைக்கப்பட்டதுடன், குளத்தின் கீழ் புதிதாக 100 ஏக்கர் வயல்நிலங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இருப்பினும் முன்பு விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட 15ஏக்கர் வயல் நிலங்களுக்கான நீர்ப்பாசன வாய்க்கால்களே தற்போதும் காணப்படுகின்றன.

பின்னர் வழங்கப்பட்ட 100 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன வாய்க்கால்கள் இல்லை. எனவே குளத்தில் விவசாய நிலங்களுக்குத் தேவையான நீர் காணப்படுகின்றபோதும், நீர்ப்பாசன வாய்க்கால்கள் இல்லாமையினால் விவசாய நிலங்களுக்கு நீரினைப் பாய்ச்ச முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் மூப்பங்குளத்தின் கீழ் இம்முறை 75ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே மூப்பங்குளத்தின் கீழுள்ள விவசாய நிலங்களுக்குரிய நீர்ப்பாசன வாய்க்கால்களை அமைத்துத்தர உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (நி-4)






கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஊர்காவற்றுறை படகுத் துறையில் கடற் கலன்களைப் பரிசோதிக்கும் கட்டடம் மற்றும் வணிக கப்பற்றுறை செயலக உப அலுவலக கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார். குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: சிவசாந்தன்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 – 05 – 1947



மறைவு 23 – 12 – 2020

### கலாபூஷணம்
## சதாசிவம் உருத்திரேஸ்வரன்

(J.p, ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர் கமநல சேவைகள் திணைக்களம், பிரபல நாடகக் கலைஞர், சைவப்புலவர், முன்னை நாள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் புலோலி கிழக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் உருத்திரேஸ்வரன் அவர்கள் 23.12.2020 நேற்று புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மகாதேவா- பாலாம்பிகை தம்பதியினரின் மருமகனும் பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி விஜியராணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான சத்தியமூர்த்தி, உமாராணி, ரஞ்சிதாதேவி மற்றும் விஜயேந்திரன் (லண்டன்), பொன்மதி (புஷ்பம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலகவதி, காலஞ்சென்ற பகவதி மற்றும் கலைமதி, கனகசபாபதி, சற்குணன், மாணிக்கராஜன், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், பாலசுப்பிரமணியம் மற்றும் சந்திரா, சிவாஜினி ஆகியோரின் மைத்துனரும் கௌரி, சிவகுமார், தர்ஷினி (கொழும்பு சட்டத்தரணி), நந்தகுமார், சிவகாமி காலஞ்சென்ற பிரஷாந்தி ஆகியோரின் சிறிய தந்தையும் மனோஜன், மாதுழன், ஆதவன், ஆதர்ஷா ஆகியோரின் பெரிய தந்தையும் உமாகாந்தன், கஜனி, நளினி, ஸ்ரீகணேஷராஜா (சட்டத்தரணி) ஆகியோரின் மாமனாரும் சேயூரன், சேயோன், செந்தாழன், சாருகேசன், சாம்பவி, வேதா, நந்திதா, ஹீரா, சங்கர், அஞ்சலி, சங்கரி, ஹரிஸ், நிமேஷ், உதர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் 24. 12.2020 இன்று வியாழக்கிழமை கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 8.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து இறுதிக் கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்பு பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியை இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-1001)

தகவல்:- திருமதி விஜியராணி (மனைவி) சிரேஷ்ட சட்டத்தரணி,
ஸ்ரீகணேஷராஜா (மருமகன்), சட்டத்தரணி

அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

0773553133

### அரசசார்பற்ற நிறுவனங்களின்
# திட்ட முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் குழுக் கூட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடப்பாண்டில் நாற்பது அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் திட்ட மீளாய்வுக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் 36 அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தங்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் தன்மைகள், அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இதன்போது திட்டங்களை நடைமுறைப் படுத்தும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன் குறித்த திட்டங்களை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டமொன்றை முன்னெடுக்குமாறும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும் கால்நடைகளினால் ஏற்படுகின்ற பல்வேறுவிதமான விபத்துக்கள், அதனால் ஏற்படுகின்ற பாரதூரமான பிரச்சினைகளை சுட்டிக்காட்டினார்.

அடுத்த திட்டங்களில் ஒன்றாக கால்நடைகளை இலகுவில் இனங்காண்பதற்காக அவற்றின் கழுத்தில் ஒளிரும் பட்டியை அணிவிக்கும் செயற்றிட்டமொன்றை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடப்பாண்டில் 40 அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு விதமான நலத்திட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-281)

# நத்தார் திருப்பலிகளில் 50 பேர் மட்டும்; சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு

## யாழ்.குரு முதல்வர் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**நத்தார் திருப்பலிகளில் அதிகபட்சமாக 50 பேர் மாத்திரமே பங்குபற்ற முடியும், சுகாதார பிரிவுக்கு ஒத்துழையுங்கள் என யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார். நத்தார் விசேட திருப்பலிகள் தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்**

கிறிஸ்தவ தேவாலய திருப்பலிகள் பற்றியும் குறிப்பாக நத்தார் தின விசேட திருப்பலிகள் பற்றியும் சில அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தோம்.

தற்பொழுது ஒரு முக்கியமான அறிவித்தலை வழங்க விரும்புகின்றேன். அதாவது தேவாலயங்களில் நடைபெறுகின்ற திருப்பலிகளில் அதிகபட்சமாக 50 பேர் மாத்திரமே பங்குபற்ற முடியும் என கண்டிப்பாக சுகாதாரப் பிரிவினரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே தேவாலயங்களில் இடம் பெறும் பூஜைகளின்போது 50 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள் என்பதனை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏற்கனவே தேவாலயங்களில் அதிகமானவர்கள் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் அவையெல்லாம் இரத்து செய்யப்படுகின்றன என்பதனையும் அதிகபட்சமாக 50 பேர் மாத்திரமே எமது விசேட திருப்பலிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவீர்கள் என்பதனையும் தெரிவிக்க விரும்புகிறேன்.



இதனால் பலர் திருப்பலிகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படும். இதனால் நீங்கள் யாரிடமும் மனத்தாங்கல் கொள்ளாமல் உலகத்தினுடைய நன்மைக்காக நீங்கள் செய்கின்ற ஒரு தியாகமாக இதனைக்கருதி இந்த திருப்பலி நிகழ்வுகளில் குறிப்பாக நத்தார் மற்றும் புதுவருட திருப்பலிகளை வீடுகளில் இருந்து நேரடியாக இணையத்தளங்களிலும் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பாகுவதை கண்டுகளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு இந்த நடைமுறை தொடர்பில் ஒவ்வொரு பங்குச் தந்தையர்களுக்கும் விரிவாக குறித்த விடயம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. மக்கள் குறித்த விடயம் தொடர்பில் தங்களுடைய ஒத்துழைப்பை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்தோடு திருப்பலி அல்லாத வேளைகளிலே பகல் வேளைகளில் நீங்கள் வழமை போன்று ஆலயத்திற்குச் சென்று பாலகன் இயேசுவினுடைய ஆசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நத்தார் தினத்தன்று 24 ஆம் திகதி நள்ளிரவு 11.30 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திருப்பலி நடத்தப்பட இருக்கின்றது.

திருப்பலி நிகழ்வுகள் யாவும் நேரலையாக தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாகும்.

எனவே திருப்பலிகளை வீடுகளில் இருந்தவாறு கண்டுகளிப்பதன் மூலம் இக்கொடிய நோயிலிருந்து எம்மையும் சமூகத்தினையும் பாதுகாப்பதற்கு உதவிபுரியும் என்றார். (5-4-33)

# தொடர்ந்தும் இடம்பெறும் விழிப்புணர்வு பிரசாரம்

(குப்பிழான்)

தற்போது யாழ்.மாவட்டத்திலும் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் கொரோனாத் தொற்றிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வுப் பிரசாரம் இணுவில், தாவடிப் பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய வலி. தெற்குப் பிரதேச சபையினரும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து கடந்த ஒரு வார காலமாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வுப் பிரசாரத்தை ஒலிபெருக்கிகள் மூலம் முன்னெடுத்து வருகின்றனர்.

ஏற்கனவே, உடுவில், மருதனார்மடம், இணுவில், சுன்னாகம், சூறாவத்தை, கந்தரோடை, குப்பிழான், ஏழாலை ஆகிய பகுதிகளில் குறித்த விழிப்புணர்வுப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் புதிய கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனம் காணப்பட்டதையடுத்து நேற்றைய தினம் இணுவில் மற்றும் தாவடிப் பகுதிகளில் மீண்டும் விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. (5-4-18)



நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நுவான் தலைமையில் நேற்று நெல்லியடி நகரில் துவிச்சக்கர வண்டிகளுக்குஇரவு நேரங்களில் ஒளியூட்டும்ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. (படம்:- மகாலிங்கம்)

# மரக்கறிக் கடைகள் எரிந்து நாசம்



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மந்துவில் சின்னச் சந்தை செவ்வாய்க்கிழமை இரவு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இதன்போது சந்தையில் காணப்பட்ட மூன்று மரக்கறிக் கடைகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

தீப் பரவலுக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தற்போது கொரோனா அபாய சூழ்நிலையில் உள்ளூர்ச் சந்தைகள் மக்களுக்கு மிகவும் பிரியோசனப்பட்டு வந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (5-4-30)




# இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் அருள்வாளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளன. அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் நாட்டின் நிலைமைகளுக்கேற்ப பூசைகளில் மாற்றம் ஏற்படலாம் எனவும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5)

# பழமரக்கன்றுகள் வழங்கிவைப்பு



(சாவகச்சேரி)

அரசாங்கத்தின் சுபீட்சமான நோக்கு செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பழ மரக் கன்றுகள் நேற்று புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜனின் இணைப்பாளர் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்தோட்டப் பயனாளிகளுக்கு பழமரக் கன்றுகளை வழங்கி வைத்திருந்தார். (5-4-30)

## ஆபரணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் பொன்னிறத்தினாலான ஆபரணம் ஒன்று நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி ஆபரணத்தைத் தவற விட்டவர்கள் தகுந்த அடையாளத்தைக் காட்டி யாழ்.போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (5)

# மகர சிறைச்சாலைக் கைதிகள் எழுவரின் பிரேத பரிசோதனை அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)
மகர சிறைச்சாலை சம்ப வத்தில் உயிரிழந்த 7 கைதி களின் பிரேத பரிசோதனை அறிக்கை வத்தளை நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்த 11 பேரில் நால்வரின் அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிரு ந்தது.

நீதிமன்றத்தினால் ஏற்க னவே அறிவிக்கப்பட்டமைக்கு அமைய, உயிரிழந்த கைதிகள் நால்வரின் சடலங்களை தக னம் செய்வதற்கு காலம் சென் றமையினால் ஏனைய 7 கைதி களின் மரண பரிசோதனையை முன்னெடுக்க முடியாது போன தாக நிபுணர்குழு தெரிவித்திரு ந்தது.

இது தொடர்பில் குற்றப்புல னாய்வுத் திணைக்களம் கடந்த தவணையின் போது மன்றுக்கு அறிவித்திருந்தது.

அதற்கமைய, 7 கைதிக ளின் சடலங்கள் மீதான மரண பரிசோதனையை முன்னெடு த்து, நேற்றைய தினத்திற்குள் மன்றில் சமர்ப்பிக்குமாறு வத் தளை நீதவான் புத்திக்க சிரீ ராகல ஜவரடங்கிய நிபுணர் குழுவிற்கு உத்தரவிட்டார்.


கடந்த 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் மகர சிறைச்சா லையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 11 கைதிகள் உயி ரிழந்ததுடன் சிறைச்சாலை அதிகாரிகள் சிலரும் காயமடை ந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வரிச்சலுகை மூலம் இறக்குமதியில் மோசடி; மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)
அண்மையில் வழங்கப் பட்ட வரிச்சலுகை மூலம் சீனி மற்றும் தேங்காய் எண்ணெய் இறக்குமதியில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த ஜூன் 16, 26 மற்றும் ஜூலை 10 ஆம் திகதிகளில் வெளியிடப்பட்ட மூன்று வர்த்த மானி அறிவித்தல்களை இர த்து செய்து, டிசெம்பர் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம், இரண்டு தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்களால் இறக் குமதி செய்யப்பட்ட 10,000 மெற் றிக் தொன் தேங்காய் எண்ணெ ய்க்கு வரிச்சலுகை நீடிக்கப்பட்டு ள்ளதாக மக்கள் விடுதலை முன் னணி குறிப்பிட்டது. (நி-4)

# தனிமைப்படுத்தலில்




(கொழும்பு)
கழிவகற்றல் முறைமை தொடர்பாக இடம்பெற்ற பயிற்சி செயலமர்வுக்குச் சென்ற ஹற் றன்- டிக்கோயா நகர சபை ஊழியர்கள் 10 பேர் சுயதனி மைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கண்டி நவயாலதென்னை யில் மத்திய மாகாணத்துக்கு உட்பட்ட மாநகர சபை, நகர சபை ஊழியர்களுக்கு மேற்படி செயலமர்வு நடத்தப்பட்டது.

இந்த வதிவிட செயலமர் வில் கலந்துகொண்ட மாத் தளை மாநகர சபை ஊழியர் ஒருவருக்குத்தொற்று உறுதிசெ ய்யப்பட்டது. இதனையடுத்தே, செயலமர்வுக்குச் சென்ற ஹற் றன் - டிக்கோயா நகர சபை ஊழி யர்கள் 10 பேரும் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகா தார அதிகாரி தெரிவித்தார். (நி-4)

# மட்டக்களப்பில் வெள்ள அனர்த்தம் 35 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக பெய்துவந்த அடைமழை கார ணமாக 10 ஆயிரத்து 716 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 640 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவ ட்ட அரசாங்க அதிபர் கே.கரு ணாகரன் தெரிவித்துள்ளார்.



கடந்த 21, 22 ஆம் திகதி களில் பெய்த அடைமழை கார ணமாக மாவட்டத்தின் அனை த்து பிரதேச செயலாளர் பிரிவுக ளிலுமுள்ள மக்கள் பாதிக்கப்பட் டுள்ளனர். வெள்ள அனர்த்தத்தி னால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுகாதார விதிகளுக்கமைவாக உறவி னர், நண்பர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-4)

(கம்பளை)
முகக்கவசம் அணியாது கம் பளை நகரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுப ட்ட 50 பேரை, சுயதனிமைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க ப்பட்டுள்ளது.

தொழுகையில் ஈடுபட்டோ ரில் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

கம்பளை- நாவலப்பிட்டி வீதி பகுதியில் வசிப்போரே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

பள்ளிவாசலில் தொழுகை யில் ஈடுபட 25 பேருக்கே சுகா தாரப் பிரிவு அனுமதி வழங்கி யுள்ளபோதிலும் விதிமுறை களை மீறி இவ்வாறு தொழு கையில் ஈடுபட்டுள்ளனர் என் றும் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# தனியார்துறை ஊழியர்களுக்கான அறிவித்தல்

(கொழும்பு)
தனியார் துறை ஊழியர்க ளின் ஓய்வூதிய வயதை 60 ஆக அதிகரிக்க தேவையான சட்டதிட்டங்களை அறிமுகப் படுத்த தொழிலாளர் ஆணை யாளர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள் ளது.

நேற்று இடம்பெற்ற ஊட க வியலாளர் சந்திப்பின் போது தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வ ரும் வாரத்தில் உரிமையாளர் கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் இணைந்து இந்த விடயம் தொடர்பில் முடிவுக்கு வர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# மஞ்சளுடன் இருவர் கைது



(புத்தளம்)
புத்தளம் - மாம்புரி பகுதி யில் வீட்டில் மறைத்து வைக்க ப்பட்டிருந்த ஒரு தொகை மஞ் சளுடன் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தக வலுக்கமைய, நேற்று முன்தி னம் சுற்றிவளைப்பு முன்னெ டுக்கப்பட்டது.

இதன்போது, பொலித்தீன் பைகளில் பொதியிடப்பட்ட நிலை யில் 1,980 கிலோ கிராம் மஞ் சள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சம்பவம் தொடர்பில் மாம்புரி பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜ ர்படுத்தப்படவுள்ளனர்.

மஞ்சள் கைப்பற்றப்பட்டமை தொடர்பிலான மேலதிக விசா ரணைகளை நுரைச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (நி-4)

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தொடர்பில் பாராளுமன்றில் உரிய நடவடிக்கை

## எடுக்கப்படும் என்கிறார் ரம்புக்வெல

(கொழும்பு)
மின்சாரத்துறையின் அபி விருத்தி திட்டங்கள் திட்டமிட்ட வகையில் கால தாமதப்படுத்த ப்பட்டுள்ளன. பொதுபயன்பாட்டு ஆணைக்குழு தொடர்பில் பாரா ளுமன்றத்தில் உரிய நடவடி க்கை எடுக்கப்படும் என அமைச் சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கு புதிய உறுப்பினர் களை நியமித்தல் அல்லது இந்த ஆணைக்குழுவுக்கு இணை யாக பிறிதொரு ஆணைக் குழுவை ஸ்தாபித்தல் குறித்து ஆராயப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இணையவழியூடாக அர சாங்க தகவல் திணைக்களத் தில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங் களை அறிவிக்கும் ஊடகவிய லாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறு கையில்,

சுபீட்சமான எதிர்கால கொள் கைத் திட்டத்தில் மின்சாரத் துறையை வலுப்படுத்த பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள் ளன. இத்திட்டங்கள் கடந்த ஒரு வருட காலமாக திட்டமிட்ட வகையில் காலதாமதப்படுத்த ப்பட்டுள்ளன.

இதற்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவும் ஒரு வகை யில் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பி னர்கள் தங்களின் பதவிக் காலம் நிறைவு பெற முன்னர் சுயமாகவே பதவி துறப்பது வழமையாகும். இதனடிப்படை யிலே பொதுப்பயன்பாட்டு ஆணை க்குழுவின் உறுப்பினர்கள் பதவி துறந்துள்ளார்கள்.

மின் சாரத் துறையினை மேம்படுத்த பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அவசியமற்றது என்றும், ஆணைக்குழுவை நீக்க வேண்டும் என்றும் துறை சார் நிபுணர்கள் தெரிவித்தார் கள்.



பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழு குறித்து பாராளுமன்றத் தில் உரிய தீர்மானம் எடுக்கப் படும். பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கு புதிய உறுப்பினர் நியமனம் செய்தல் அல்லது இந்த ஆணைக்குழுவுக்கு இணையாக பிறிதொரு ஆணைக் குழுவை நிறுவுதல் குறித்து ஆரா யப்படுகிறது என்றார். (நி-4)

# வெட்டுப்புள்ளி விவகாரம்; மனுக்கள் தள்ளுபடி

(கொழும்பு)
பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகளுக்கு அமைய பொறி யியல் மற்றும் பௌதீக விஞ் ஞான பீடங்களுக்கு மாணவ ர்களை இணைத்துக்கொள் வதற்கு இடைக்காலத் தடையுத் தரவைக் கோரி தாக்கல் செய் யப்பட்ட அடிப்படை உரிமை மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள் ளாது உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பிரதேசத்தின் நிலைமைக்கு ஏற்ற வகையில் நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும்

## பிரதேச செயலாளர்-ரஞ்சனா

**(நெளுக்குளம்)**

**முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 99 வீதமான வீதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அதிகமான நிதி ஒதுக்கீடுகள் செய்து தரப்பட வேண்டுமென மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ந.ரஞ்சனா கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் இடம் பெற்ற மாந்தை கிழக்குப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தித் திட்டங்களு க்காக மாவட்ட செயலகத்தினால் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் நிதி ஒதுக்கப்படுவது வழக்கம்.

எனினும் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் தொகை குறைவாக காணப்படுவதால் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலேயே ஒதுக்கப்படுகிறது.

எப்போதுமே குறைந்தளவு மக்கள் தொகையுள்ள பிரதேசமென மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்கு குறைந்தளவு நிதி ஒதுக்கினால், இப் பிரதேசம் தொடர்ச்சியாக பின்தங்கிய பிரதேசமாகவே இருக்கும் நிலையே ஏற்படும்.

குறிப்பாக மாந்தை கிழக்கிலுள்ள 99வீதமான வீதிகள் மிகமேசமான நிலையிலேயே காணப்படுகின்றன. எமது பிரதேசத்திற்கு வீதிகளுக்கான நிதி ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே ஒதுக்கப்படுகின்றது.

இவ்வாறு பிரதேசத்திலுள்ள அனைத்து வீதிகளையும் அமைப்பதற்கு குறைந்த அளவிலான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றபோது எம்மால் சிறிது தூரமான தார் வீதியே அமைக்க முடியும்.

எனினும் பிரதேசத்தில் வீதி அமைப்பதற்கான கோரிக்கைகள் அதிகம் காணப்படுவதனால், அனைத்து வீதிகளையும் கிரவல் வீதியாக அமைக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

அவ்வாறு அமைக்கப்படுகின்ற கிரவல் வீதியை வருடாவருடம் சீர்செய்ய வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இந் நிலையில் தொடர்ச்சியாக நாம் வீதி அமைக்கின்ற செயற்பாட்டையே செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

எனவே நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, மாந்தை கிழக்குப் பிரதேசத்தி னுடைய நிலைமையினை அறிந்து அதற்கேற்ற வகையில் நிதி ஒதுக்கீடு செய்து உதவ வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (5-4-299)

# வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக பூட்டு


(நெளுக்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள அம்மாச்சி உணவகம் நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டுள்ளது.

வவுனியாவில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவரின் குடும்ப உறுப்பினர் தொற்று உறுதி செய்வதற்கு முன்னர் வவுனியா அம்மாச்சி உணவகத்திற்கு சென்றுள்ளார். இதனையடுத்து சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தல்களிற்கமைய அம்மாச்சி உணவகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியாவில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணிய பலர் தனிமைப்படுத்தலிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், சில வியாபார நிலையங்களும் பூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# உடைப்பெடுக்கும் நிலையில் தண்ணிமுறிப்புக்குளம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணி முறிப்புக்குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள தண்ணி முறிப்புக் குளத்தின் அணைக்கட்டு உள்பக்கமாக 200 மீற்றர் தூரத்திற்கு அரிப்பு ஏற்பட்டுள்ளது.

குளம் உடைப்பெடுக்காது பாதுகாப்பதற்காக தற்காலிகமாக மண்மூடைகள் போடப்பட்டு பாதுகாப்பு வேலி அமைக்கும் வேலைத்திட்டம் நீர்ப்பாசன திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இக் குளக்கட்டிற்கு முழுமையாக அலைக்கல்லு போடாததன் காரணமாகவே இவ் அரிப்பு ஏற்பட்டுள்ளது. குளத்தின் நீர் மட்டம் உயர்ந்த நிலையிலேயே இவ் அரிப்பு ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் குளங்களுள் நான்காவது பெரிய குளம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-4-281)

# யானைகள் அட்டகாசம்

## பயன்தரும் மரங்கள் அழிப்பு



(முறிகண்டி)

பூநகரி 4 ஆம் கட்டைப் பகுதியில் இரவு புகுந்த காட்டு யானையால் பயன் தரு தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் செவ்வாய் இரவு குறித்த பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் தோட்ட காணிக்குள் புகுந்த யானை 20 தென்னை மரங்களை அழித்துள்ளது.

அண்மைய நாட்களாக குறித்த பகுதியில் யானைகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாகவும், பயன்தரும் மரங்களை அழிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

யானை தொல்லையிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-100)



**மடு கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மடு வலயக்கல்வி பணிமனையில் மடு வலயக் கல்வி அலுவலக கல்வி மேம்பாட்டிற்கான அலுவலகம் மற்றும் குணரத்தினம் பவுன்டேசன் ஆகியற்றின் அனுசரணையுடன் மடு வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் தலைமையில் இடம்பெற்றது. (படம்- ஜோசப்நயன்)**



முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2020 ஆம் ஆண்டு மாகாண மட்ட போட்டிகளின் ஊடாக தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவான வீர வீராங்கனைகளுக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

# இராசிபலன்

**24.12.2020**
**மார்கழி 09, வியாழக்கிழமை**
**தசமி பின்னிரவு 1.13 மணிவரை**
**ரேவதி காலை 7.03 மணிவரை**
**சுபநேரம் 7.56 - 9.26 மணிவரை**
**இராகுகாலம் 1.56 - 3.26 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- அத்தம்.**

வளவன்


மேஷம்

கனவு பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதிர்பார்க்காமல் செய்த காரியமொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கற்பனை மிகுதியான நாள்.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில்ரீதியான பயணங்கள் ஏற்படலாம்.


மிதுனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கடகம்

உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாழ்த்தைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.


சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.


கன்னி

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.


துலாம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


தனுசு

நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.


மகரம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர்நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோர் மீதான பாசம் கூடும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.


மீனம்

எதிர்பாராத தனவரவுகள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**கடன் வாங்கவும் செய்யாதே, கொடுக்கவும் செய்யாதே.**

# குப்பையில் வீசப்பட்ட ஒன்றரை இலட்சம் ரூபாய் கண்டுபிடித்து கொடுத்த துப்புரவு ஊழியர்கள்

(மட்டக்களப்பு)

ஒன்றரை இலட்சம் ரூபாய் பணத்தை குப்பை பையில் தவறுலாக போட்டு, அதனை குப்பை சேகரிக்கும் வண்டிக்கு அனுப்பிய ஒருவர், பிறகு அந்தப் பணத்தை பெரும் முயற்களின் பின்னர் பெற்றுக் கொண்ட சம்பவமொன்று மட்டக்களப்பு கல்முனைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

கல்முனை நகர மண்டப வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வழமைபோன்று, வீடுவீடாக குப்பைகளைச் சேகரித்துக் கொண்டிருந்த கல்முனை மாநகர சபையின் திண்ம கழிவகற்றல் வாகனமொன்றில், தனது வீட்டுக்குப்பை பையினை பெண்ணொருவர் ஏற்றியுள்ளார்.

இதேவேளை, வெளியில் சென்றிருந்த அந்தப் பெண்ணின் கணவர் வீட்டுக்கு வந்த போது, சிறிய பை ஒன்றினுள் இட்டு, மேசை மீது அவர் வைத்திருந்த பணம் காணாமல் போயிருந்தது தெரியவந்தது.

இது குறித்து கணவர் கேட்ட போது "குப்பைகளுடன் தவறுதலாக பணமும் சென்றிருக்கலாம்" என மனைவி கூறியுள்ளார்.

உடனடியாக கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் பிரிவின் மேற்பார்வையாளர் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்ட பணத்தின் உரிமையாளர், விடயத்தைக் கூறியுள்ளார்.

இதனையடுத்து, மாநகர சபை ஊழியர்கள் துரிதமாகச் செயற்பட்டு, குறித்த வாகனத்திலிருந்த குப்பைகளிலிருந்து சம்பந்தப்பட்ட நபர் ஏற்றி அனுப்பிய குப்பை பையினை எடுத்துப் பார்த்தபோது, அதனுள் ஒன்றரை இலட்சம் இலங்கை ரூபாய் பணம் கண்டெடுக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (நி-4)

# பண்டிகை நாட்களில் மதுபானசாலைகள் மூட தீர்மானமில்லை-கலால் திணைக்களம்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய கொரோனா வைரஸ் நிலைமைகளின் போதும் மதுபான சாலைகளை மூடுவது குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை என கலால் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நாட்டின் மதுபானசாலைகள் சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் தற்போது வரை இயங்கி வருவதாக கலால் திணைக்கள பிரதி ஆணையாளர் கபில குமாரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிகை காலங்களில் மதுபானசாலைகளை மூடுமாறு சில குழுக்கள் ஊடகங்கள் மூலம் கோரிக்கைகள் விடுத்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், இலங்கையில் முதல் கொரோனா வைரஸ் அலையின் போது மதுபானசாலைகள் மூடப்பட்டன.

இதனால் சட்டவிரோத மது பானம் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மதுபானசாலைகள் மீள மூடப்பட்டால் அவ்வாறானதொரு நிலை உருவாகும் என்றும் கூறினார்.

தற்போது நாட்டில் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஊரடங்கு உத்தரவின் கீழ் உள்ள அனைத்து பகுதிகளிலும் மது பானசாலைகள் மூடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் குறித்த பகுதிகளை தவிர பண்டிகைக் காலங்களில் மதுபானசாலைகளை மூட எந்த நடவடிக்கையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# மண் சரிவு அபாயம்



(ஹற்றன்)

நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் பெய்து வரும் மழையினால் கந்தப்பளை தோட்டம் கொன்கோடியா மத்திய பிரிவில் மண் சரிவு அபாயம் காரணமாக 7 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

குறித்த 33 பேரும் கொன்கோடியா தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உலர் உணவு பொருட்கள் நுவரெலியா பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது. (நி-4)

# பாணந்துறை ஆடைத்தொழிற்சாலை 80 பேருக்கு தொற்று உறுதி

## ஆடைத்தொழிற்சாலையை மூட நடவடிக்கை

(பாணந்துறை)

பாணந்துறை - ஹொரண மார்க்கத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் 80 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக பாணந்துறை நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த ஆடைத் தொழிற்சாலையை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்ணொருவருக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில், அப்பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



இதனையடுத்து அத்தொழிற்சாலையில் கடமையாற்றும் ஏனைய ஊழியர்களும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போதே அவர்களில் 80 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (நி-4)

# சுயதனிமைப்படுத்தலில் அமைச்சர்,எம்.பிக்கள்

(ஹற்றன்)

அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஸ்வரன், நிமல் பியதிஸ்ஸ ஆகியோர் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# இந்திய அமெரிக்கர்களை வெ.மாளிகையில் இணைத்தார் பிடன்



(வோஷிங்டன்)
இந்திய அமெரிக்கர்களான கவுதம் ராகவன் மற்றும் வினய் ரெட்டி ஆகியோரை வெள்ளை மாளிகையில் கூடுதல் உறுப்பினர்களாக ஜோ பிடன் நியமனம் செய்துள்ளார்.


அமெரிக்காவில் கடந்த நவம்பரில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடன் வெற்றி பெற்று அடுத்த ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதேபோன்று துணை ஜனாதிபதியான தெற்காசியாவைச் சேர்ந்த இந்திய வம்சாவளியான கமலா ஹாரிஸ் தேர்வு செய்யப்பட்டார். அடுத்த ஆண்டு ஜனவரியில் பிடன் பதவி ஏற்கவுள்ளார்.

இதற்கிடையே, ஜனாதிபதி அதிகாரத்துடன் அவர் பல்வேறு பதவிகளுக்கும் ஆட்களை நியமனம் செய்து வருகிறார்.

இந்நிலையில், இந்திய வம்சாவளிகளான கவுதம் ராகவன் மற்றும் வினய் ரெட்டி ஆகியோருக்கு இயக்குநர் அந்தஸ்திலான பதவிகளை ஜோ பிடன் வழங்கி உள்ளார். இதில், ஜனாதிபதிக்கான அதிகாரிகள் அலுவலக துணை இயக்குநராக கவுதம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (4)

# ஐந்து செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது சீனா



(பீஜிங்)
உலக நாடுகள் கொரோனா வைரசுடன் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், அந்த வைரஸ் உலகுக்கு பரவுவதற்கு காரணமான சீனாவோ தனது விண்வெளித் திட்டங்களில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

அந்த வகையில் செயற்கைக்கோள்களை விண்ணுக்குக் கொண்டு செல்வதற்காக சீனா நடுத்தர வகை ரொக்கெட் ஒன்றை உருவாக்கியுள்ளது. 'லாங்க் மார்ச் 8' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புதிய ரொக்கெட் 4.5 தொன் எடையை சுமக்கும் திறன் கொண்டது.

இந்த நிலையில் சீன விண்வெளி ஆய்வு மையம் நேற்று முன்தினம் ஹைனான் மாகாணத்தில் உள்ள ஏவு தளத்தில் இருந்து புதிய 'லாங்க் மார்ச் 8' ரொக்கெட் மூலம் 5 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது.

இதன் மூலம் புதிய ரொக்கெட் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டதோடு, 5 செயற்கைக்கோள்களும் புவி வட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாக சீன விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (4)

# பாகிஸ்தானில் இந்து கோவில்


## அரசு அனுமதி

(இஸ்லாமாபாத்)
பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இந்துக் கோவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் முதல் இந்துக் கோவிலை கட்டுவதற்கு கடந்த ஜூன் மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது. இஸ்லாமாபாத்தின் H9 பகுதியில் 20,000 சதுரடியில் இந்தக் கோவிலை கட்டத் திட்டமிட்டு அதற்கான பணிகள்தொடங்கின. ஆனால் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் காயித் கட்சியினரும் முஸ்லிம் மதத்தலைவர்கள் பலரும் இந்த இந்துக்கோயிலைக் கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதற்கிடையில் கடந்த ஜூலை மாதம் பாகிஸ்தானின் மூலதன மேம்பாட்டு ஆணையம் சில சட்ட காரணங்களை சுட்டிக்காட்டி இந்துக்கோவில் கட்டுமானப் பணிகளை நிறுத்தியது. இதையடுத்து மத விவகாரங்கள் துறை அமைச்சர் பிர் நூருல் ஹக் காத்ரி, இந்த விவகாரத்தை, மதப்பிரச்சினைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் முஸ்லிம் சித்தாந்த கவுன்சிலின் பார்வைக்கு கொண்டு சென்றார்.

இதனைத் தொடர்ந்து இஸ்லாமாபாத் அல்லது நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் இந்துக்கோவில் கட்டுவதற்கு அரசியலமைப்பில் எந்தக் கட்டுப்பாடுகளும்



இல்லை என அரசிடம் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து கட்டுமானப்பணிகள் நிறுத்தப்பட்டு 6 மாதங்களுக்கு பிறகு தற்போது பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசு இஸ்லாமா பாத்தில் இந்துக்கோவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதையடுத்து விரைவில் கோவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும் என இந்து அமைப்பு தெரிவித்துள்ளது. (4)

# அமெரிக்காவில் எரிமலை வெடிப்பு



(வோஷிங்டன்)
அமெரிக்காவின் ஹவாய் தீவுகளிலுள்ள கிளாவியா எரிமலை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெடித்துச் சிதறியுள்ளது.

எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சுமார் 165 அடி உயரத்திற்கு எரிமலையின் சிதறல்கள் வீசப்பட்டன. எரிமலையிலிருந்து வெளியேறிய லாவா குழம்பு அடிவாரத்தில் உள்ள ஒரு குளத்தில் சென்று சேர்ந்தது.

குறித்த நிலநடுக்கத்தை 500 இற்கும் மேற்பட்ட மக்கள் உணர்ந்துள்ளார்கள் என அமெரிக்காவின் புவியியல் ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது. (4)

# மூன்று பொலிஸார் சுட்டுக்கொலை




(பாரிஸ்)
பிரான்ஸின் மத்திய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொலிஸார் உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் காயமடைந்தும் உள்ளார்.

பிரான்ஸின் மத்திய பிராந்தியமான புய்-டி-டோம் நகரில் நேற்று புதன்கிழமை அதிகாலை வீட்டு வன்முறைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் பொலிஸார் குறித்த வீட்டுக்கு சென்றபோது 48 வயதான சந்தேக நபர் ஒருவரே பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

எவ்வாறெனினும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபரைத் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் எந்தவொரு போர்க்குணமிக்க நோக்கமும் இல்லை என பிரான்ஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். (4)

# கற்றலில் கவனம் (Attention in Learning)

## அறிமுகம்

பாடசாலை என்னும் நிறுவனத்தின் மிக முக்கிய பங்குதாரர்களாக விளங்குபவர்கள் மாணவர்களும் ஆசிரியர்களும் ஆவர். அவர்களிடையே ஏற்படுத்தப்படுகின்ற அனைத்துப் பிணைப்புக்களுக்கும் முக்கிய மூலாதாரமாக விளங்குவது கற்றல்- கற்பித்தற் செயற்பாடாகும்.

அந்தவகையில் கற்றலில் கவனமும் அதில் செல்வாக்குச் செலுத்தும் புறவயமான, அகவயமான காரணிகள் தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டியது ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி மாணவர்கள், அவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் கல்விப்புலத்தை சார்ந்த அனைவருக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பது கட்டுரையாளரின் கருத்தாகும்.

**Matzel & Kolata (2010)** என்பவர்களின் கூற்றுப்படி கவனம் என்பது எம்மைச் சுற்றியுள்ள சூழலில் காணப்படும் ஏதோ ஒரு விடயத்தின் மீது அல்லது ஒரு பொருளின் மீது அல்லது ஒரு நபரின் மீது நாம் காட்டும் உன்னிப்பான அவதானிப்பாகும். இதன் போது அக்குறிப்பிட்ட விடயம் அல்லது பொருள் அல்லது நபரை சூழவுள்ள மற்றைய விடயங்கள் கவனிப்போனால் புறக்கணிக்கப்படுகின்றன.


இவ்வாறு புறக்கணிக்கப்படுபவை எமது கவனத்தில் மேலோட்டமாகவே உள்வாங்கப்படுகின்றன. இதனை கவனமின்மை **(In-attention)** என்கின்றோம். கவனம் என்ற விடயத்தில் கவனமின்மை என்பது மிக முக்கிய பங்காற்றுகின்றது. ஏனெனில் எமது கவனம் ஒன்றின் மீது செலுத்தப்பட வேண்டுமாகில் அந்த விடயம் தவிர்ந்த ஏனையவை கவனமின்மை என்ற விடயத்திற்குள் கொண்டு செல்லப்படல் வேண்டும்.

உளவியல் அறிஞர்களின் கருத்துப்படி எமது மூளையின் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. எனவே அவை எம்மைச் சூழ நடைபெறுகின்ற எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. உதாரணமாக ஒரு இரவு நேரத்தில் தன்னுடைய அழகான மனைவியுடன் வீதியில் பயணிக்கும் ஒருவர் அந்த நேரத்தில் தன்னை தாண்டி பெருஞ்சத்தத்துடன் செல்லும் பேருந்தையோ அல்லது தங்களை கடந்து சென்ற மக்களையோ ஒரு போதும் கவனத்தில் கொள்வதில்லை. அதாவது இவை தொடர்பான விபரங்கள் அவருடைய ஞாபகப்பகுதியை சென்று சேர்வதில்லை.

நாம் எமது ஐம்புலன்களினூடாக பெறும் புலன் உணர்ச்சிகள் மூலம் எமது சூழலை விளங்கிக் கொள்கின்றோம். சூழலில் காணப்படும் யாதேனும் தூண்டியின் பால் எமது கண்கள், காது, மூக்கு, வாய், தோல் போன்ற புலனங்கங்களைச் செலுத்துவதன் விளைவாகவே கவனம் ஏற்படுகின்றது.

ஒரு தனியாளினால் ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் ஒரு தூண்டியின் பால் மாத்திரமே கவனஞ் செலுத்த முடியும் என்பது உளவியலாளர்களினதும் கல்வியியலாளர்களினதும் பொதுவான கருத்தாகும். இதனடிப்படையில் "தூண்டிகள் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு சூழலில் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு தூண்டியின் பால் மாத்திரம் புலனங்கங்களை வழிப்படுத்துவதே கவனமாகும்" என கவனத்தை எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

## கவனத்தின் வகைகள்



கவனம் இருவகைகளாக பிரிக்கப்படலாம்.

### 1.பிரிக்கப்பட்ட கவனம் (Divided Attention)

பிரிக்கப்பட்ட கவனம் என்பது ஒரு தடவையில் அல்லது ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட செயற்பாடுகளில் எமது புலனை செலுத்துவதாகும்.

உதாரணமாக : பாடம் படித்துக் கொண்டிருக்கையில் இதமான ஒரு பாடலைக் கேட்பது அல்லது தொலைக்காட்சி பார்ப்பது என்பவற்றை குறிப்பிடலாம்.

### 2.நிலைத்து நிற்கக்கூடிய கவனம் (Sustained Attention)

நிலைத்து நிற்கக்கூடிய கவனம் என்பது தெரிவு செய்யப்பட்ட ஒரு தூண்டியின் மீது நீண்ட நேரத்திற்கு தொடர்ச்சியாக கவனத்தைச் செலுத்தக் கூடிய ஆற்றலாகும்.

உதாரணமாக : பரீட்சைக்கு படிக்கும் போது நீண்ட நேரமாக மிகவும் நெருக்கமான கவனத்தை பாடக்குறிப்புக்களின் மீது செலுத்துதலை குறிப்பிடலாம்.

## கவனத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்


ஒருவருடைய கவனத்தில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை பொதுவாக இரு வகைகளுக்குட்படுத்தப்படுகின்றன.

### 1.விடயம் சார்ந்த காரணிகள்/ புறவயமான காரணிகள் ( External factors or Objective factors)

புறவயமான காரணிகள் என்பவை சூழலுடன் தொடர்புடையவையாகும். இவற்றினை நாம் சிறப்பாக கையாளும் போது கவனத்தினை உயர்வாக ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஆசிரியர்களால் பெரிதும் கையாளக்கூடிய காரணிகளாக அமைவதும் இப் புறவயமான காரணிகளேயாகும்.

#### a)பொருளின் பருமன் (Size)







மேலே உள்ள உருவில் தெரிகின்ற பெரிய வட்டம் எமது கவனத்தை ஈர்ப்பது போல பொதுவாக பொருத்தமற்ற பருமனில் உள்ள உருவங்களின் மீது எமது கவனம் ஈர்க்கப்படுவது இயல்பான தொன்றாகும். அதாவது இயல்பான பருமனில் உள்ள பொருட்களுடன் ஒப்பிடும்போது பருமனில் சிறிய அல்லது பெரிய உருவங்கள் எமது கவனத்தை விரைவாக ஈர்க்கின்றன.

உதாரணமாக வீதியால் நடந்து செல்லும் ஒரு குட்டையான மனிதன் **(Dwarf man)** மீது எமது கவனம் ஈர்க்கப்படுதல்.

எனவே வகுப்பறைக் கற்பித்தலின் போது ஆசிரியர்கள் பெரிய அளவிலான படங்கள், போஸ்டர்கள் என்பவற்றை பயன்படுத்துதல், வெண்பலகையில் பெரிய எழுத்துக்களில் எழுதுதல் மாணவர்களின் கவனத்தை எளிதில் ஈர்க்கும்.



#### b)பொருளின் செறிவு ( Intensity)

பொருளின் செறிவு என்னும் போது பொருளின் பண்பின் **(Quality)** அதன் செறிவு **(Intensity)** ஆக அமைகின்றது. இயற்கையாக உரத்த சத்தங்கள், செறிவான மணங்கள், ஆழமான நிறங்கள் தம்மை நோக்கி எமது கவனத்தை ஈர்க்கின்றன.

உதாரணமாக ஒரு காரின் சத்தத்துடன் ஒப்பிடும் போது இடியொலி எமது கவனத்தை உடனடியாக ஈர்க்கின்றது. இதற்கு காரணம் காரின் சத்தத்தைவிட இடியொலியின் சத்தமானது மிகவும் அதிகமானது.


ஆசிரியர்கள் வகுப்பறையில் உரத்த குரலில் கதைத்து பாடம் நடத்தும் போது மாணவர்களின் கவனத்தை ஏனைய புறத்தூண்டலிலிருந்து வகுப்பறைச் செயற்பாடுகளின் மீது தொடர்ந்து பேண முடியும்.

முக்கியமான குறிப்புக்களை தடித்த எழுத்துக்களில் அல்லது வேறு நிற எழுத்துக்களில் எழுதுதலும் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் உத்திகளாகும்.

#### c)அசைவு (Movement)

பொதுவாக அசையும் பொருட்கள் நிலையாக நிற்கும் பொருட்களை விட மற்றவர்களுடைய கவனத்தை இலகுவாக ஈர்க்கின்றன. ஆசிரியர்கள் கற்பித்தலின் போது அசையும் மாதிரிகளை பயன்படுத்தல், ஒரே இடத்தில் நிற்காமல் அங்கும், இங்கும் நகர்தல், கைகளை அசைத்தும் சைகைகளை பயன்படுத்தியும் கற்பித்தல் மாணவர்களின் கவனத்தை கவரும் உபாயங்களாகும்.

#### d)வேறுபட்ட தன்மை (Contrast)



ஏதாவது ஒன்று தனது சுற்றாடலில் இருந்து வேறுபட்டு காணப்படுமாயின் அது வேறுபட்ட தன்மை எனப்படும்

உதாரணமாக காகங்கள் மத்தியில் காணப்படும் அன்னம் எமது கவனத்தை இலகுவாக கவர்கின்றது. அதே போல் பாலில் விழுந்த கரிய நிற தூசு எம்மால் கவனிக்கப்படுகின்றது. கற்பித்தலின் போது பல்வேறுபட்ட உத்திகளின் பயன்பாடு அதாவது கேள்வி கேட்டல், முன் வைப்பு, சகபாடிக் கலந்துரையாடல், குழுக் கலந்துரையாடல்கள் போன்றவற்றை பயன்படுத்துதல்.

#### e)மீண்டும் மீண்டும் நிகழுதல் (Repitition)

யாதேனுமொன்று மீண்டும் மீண்டும் நிகழுதல் அல்லது ஒரு தடவைக்கு மேல் நிகழுதல் அதன்பால் நமது கவனம் செலுத்தப்படுவதற்கு காரணமாகின்றது. உதாரணமாக ஒரு விளம்பரம் ஆனது மீண்டும் மீண்டும் ஒலிபரப்பாகும் போதோ அல்லது ஒரு சுவரொட்டியை மீண்டும் மீண்டும் பார்க்கும் போதோ எமது கவனம் அதன்பால் ஈர்க்கப்படுதல்.

கற்பித்தலின் போது ஆசிரியர்கள் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை பொருத்தமான விதத்தில் திரும்ப திரும்பக் கூறல்.

#### f)கால அளவு: (Duration)

ஒரு பொருள் நீண்ட நேரத்திற்கு காட்சிக்கு உட்படுத்தப்படும் போது அல்லது ஒரு சத்தமானது நீண்ட நேரமாக ஒலித்துக் கொண்டிருக்கும் போது கவனம் அதன் பால் ஈர்க்கப்படுதல்.

உதாரணமாக பொருட்களை விற்பனை செய்யும் விற்பனையாளன் கூவிக் கூவி அழைக்கும் ஒலி அல்லது தபாற்காரனின் நீண்ட நேரமாக ஒலிக்கும் மணியொலி. கற்பிக்கப்படும் விடயங்களின் சாராம்சத்தை காட்சிப்படுத்தல், மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படும் விடயங்களைத் தெளிவாகக் கூறல்.

(தொடரும்)


**திருமதி.சுமதி ஸ்ரீசுந்தரராஜா**
**விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.**

# தமிழர்களின் பிரச்சினையை கையாண்டதுபோன்று முஸ்லிம்களின் பிரச்சினையை கையாள வேண்டாம்

## அரசை எச்சரிக்கும் தேரர்

**(கொழும்பு)**

**1983 ஆம் ஆண்டில் தமிழர்களுடன் பிரச்சினையொன்றைத் தோற்றுவித்துக் கொண்டதைப் போன்று, மீண்டும் இவ்விவகாரத்தின் ஊடாக பிரச்சினையொன்றைத் தோற்றுவிக்கும் வகையிலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் இஸ்லாமிய அடிப்படை வாதத்தை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, முஸ்லிம்களின் உரிமைகளைக் குழி தோண்டிப் புதைக்கக்கூடாது**



முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முட்டாள்தனமான தீர்மானத்தின் பின்னணியில் பௌத்த தேரர்கள் இருப்பதாகவே பலரும் கருதுகின்றார்கள். ஆனால் அது உண்மையல்ல என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பினால் கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதை எதிர்த்து அண்மையில் லண்டனில் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

அதில் "இலங்கையில் காவித்துணி அணிந்தவர்களின் பேச்சை ஜனாதிபதி கேட்கக் கூடாது" என்று ஒருவர் கூறுகின்றார். இதன் மூலம் வெளிப்படுவது என்ன? இந்த நாட்டில் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதை பௌத்த பிக்குகள் எதிர்க்கிறார்கள் என்ற அர்த்தத்தை அல்லவா அது ஏற்படுத்துகின்றது?

இங்கு பௌத்த பிக்குகள் எவரும் வைரஸ் தொடர்பில் விஞ்ஞான ரீதியில் தேர்ச்சி பெற்றவர்களல்ல. நாம் இது குறித்து கருத்து வெளியிடவுமில்லை. ஆனால் தற்போது முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதை பௌத்த பிக்குகளே எதிர்க்கின்றார்கள் என்றே மக்கள் கருதுகின்றார்கள். அதன் விளைவாக நாம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினதும் வெறுப்பிற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. மாறாக அரசியல்வாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

இதுவிடயத்தில் எவ்வித முறையான செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. தகுதி வாய்ந்த நிபுணர்கள் குழுவை நியமித்து, அவர்களின் பரிந்துரைகளைக் கேட்டறிய வேண்டும்.

அதேபோன்று இவ்விவகாரத்தில் மதத் தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும். முதலில் சடலங்களைத் தகனம் செய்யவேண்டும் என்கிறார்கள். பின்னர் குளிரூட்டியில் வைக்க வேண்டும் என்கிறார்கள். 1983 ஆம் ஆண்டில் தமிழர்களுடன் பிரச்சினையொன்றைத் தோற்றுவித்துக்கொண்டதைப் போன்று மீண்டும் இவ்விவகாரத்தின் ஊடாக பிரச்சினையொன்றைத் தோற்றுவிக்கும் வகையிலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே தனிநபர்களின் நிலைப்பாடுகளைக் கவனத்திற்கொள்ளாமல், இது குறித்து அரசாங்கம் பரந்துபட்ட ரீதியில் சிந்திக்க வேண்டும். ஏனெனில் இந்த பூமியிலிருந்து முக்தியை பெறுவதற்கு நிலத்திற்குக் கீழ் புதைக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் நம்புகின்றார்கள். எனவே வரையறுக்கப்பட்ட அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ள முடியாது. அரசாங்கம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, முஸ்லிம்களின் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கக்கூடாது. (நி-4)

# பிரித்தானிய ➔ இலங்கை - தடை இலங்கை ➔ பிரித்தானியா- அனுமதி

(கொழும்பு)

பிரித்தானியாவில் இருந்து எந்தவொரு பயணிகள், விமானங்களுக்கோ பயணிகளுக்கோ இலங்கைக்குள் பிரவேசிக்க நேற்று புதன் கிழமை அதிகாலை முதல் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலங்கையில் இருந்து பிரித்தானியாவுக்குச் செல்வதில் எந்த சிக்கலும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருவதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தைரியம்

ஒரு சின்ன பையன் என்னைத் தேடி வந்தான். மாமா ஒரு கதை சொல்லுங்க என்றான். சொந்தமாக எதுவும் தெரியாதே என்றேன். உங்களுக்கு சொந்தமாக எதுவும் தெரியாது என்பது எங்களுக்கும் தெரியும் என்றான்.

இந்தப் பையன் அடிக்கடி என்னிடம் வந்து கதை கேட்கிறவன். அதனால் என்னுடைய இரகசியம் எல்லாம் அவனுக்கு அத்துப்படி.

அதனால் தான் அவ்வளவு தெளிவாக அடித்து விட்டான். சரி இப்பொழுது என்ன செய்யலாம்? என்றேன். பழைய கதை எதையாவது சொல்லுங்களேன் என்றான். உனக்கு கிருஷ்ண தேவராயரைத் தெரியுமா? என்றேன். அவரிடம் நேரிலே பழக்கமில்லை. ஆனால் அவரைப் பற்றி புத்தகத்திலே படித்திருக்கின்றேன் என்றான். சரி இவனிடம் மேற்கொண்டு பேச்சுக்கொடுத்தால் எங்களை ஒரு மாதிரி ஆக்கி விடுவான் என்பதை யூகித்துக் கொண்டு அவனை உட்கார வைத்து கடைசி வரை குறுக்கே பேசக் கூடாது என்று ஒரு கண்டிசனையும் போட்டுவிட்டு அந்தக் கதையை சொல்ல ஆரம்பித்தேன்.

ஒரு சமயம் கிருஷ்ணதேவராயர் சமஸ்தானத்திற்கு ஒரு பெரிய வித்துவான் வந்து சேர்ந்தார். என்னுடன் போட்டி போட இந்த ஊரிலே யாராவது இருக்கின்றீர்களா? என்று சவால் விட்டார்.

அந்த ஊரிலே இருந்த பெரிய பெரிய வித்துவான்கள் எல்லாம் இது ஒரு வம்பா போய்விட்டது என்று நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். யாரும் அந்த ஆளோடு போட்டி போடுவதற்குத் தயாராக இல்லை. எல்லோரும் நடுங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்திலே ஒருத்தன் மட்டும் தைரியமாக முன்னுக்கு வந்தான். அவர் தான் தென்னாலிராமன்.

அந்த சமஸ்தானத்திலே விகடகவி அவர். என்னை அனுப்புங்க போட்டிக்கு. நான் ஜெயிச்சுக் காட்டுகின்றேன் என்றார்.

உனக்கு அவ்வளவு தைரியம் இருக்கா? என்று கேட்டார்கள்.

தைரியம் மட்டும் தான் என்னிடம் இருக்கு. ஆனால் தைரியம் இருந்தால் அதிர்ஷ்டம் தேடிக் கொண்டு வரும் என்பது எனக்குத் தெரியும் என்றான்.

அடுத்த நாள் போட்டி ஆரம்பமாகியது. அந்த பெரிய வித்துவான் வந்து நின்றார். தென்னாலிராமன் எதிரிலே வந்து நின்றான். அந்த வித்துவான் ஒரு விரலைக் காட்டினார். தென்னாலிராமன் இரண்டு விரலை நீட்டினான். வித்துவான் மூன்று விரலைக் காட்டினார். இவன் உடனே நான்கு விரலைக் காட்டினான். அவர் ஐந்து விரலை நீட்டினார். தென்னாலிராமன் உடனே தன் கை முஷ்டியை காட்டினான். அவ்வளவுதான் அந்த பெரிய வித்துவான் கிருஷ்ணதேவராயர் காலிலே விழுந்தார். நான் தோற்றுவிட்டேன். என் தோல்வியை ஒப்புக் கொள்கின்றேன் என்று சொல்லிவிட்டார்.

கிருஷ்ணதேவராயர் அவரை தனியாக அழைத்துக் கொண்டு போய் என்ன நடந்தது என்று விசாரித்தார். அந்த வித்துவான் விளக்கம் கொடுத்தார்.

ஆண்டவன் ஒருவன் தான் உண்டு என்பதை விளக்குவதற்காக நான் ஒரு விரலைக் காட்டினேன். அப்படி இல்லை. சக்தியைச் சேர்த்தால் சக்தி– சிவன் என்று இரண்டு பேர் உண்டு என்று உங்கள் வித்துவான் இரண்டு விரலைக் காட்டினான்.

மூர்த்திகள் மூன்று பேர் என்று நான் மூன்று விரலைக் காட்டினேன். வேதங்கள் நான்கு என்று அவர் நான்கு விரலைக் காட்டினார். பஞ்ச பூதங்கள் ஐந்து என்று நான் அஞ்சு விரலைக் காட்டினேன். அதையெல்லாம் அடக்கி ஆள வேண்டும் என்று சொல்லி அவர் முஷ்டியை காண்பித்தார். அடடா உங்கள் வித்துவானுக்கு எப்பேர்ப்பட்ட அறிவு? அவர் தான் ஜெயித்தார். நான் தோற்றுவிட்டேன் என்றார் அவர். அப்படி சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். அதன் பின்பு தென்னாலிராமனைக் கூப்பிட்டு நடந்தது என்ன என்று விசாரித்தார்கள். அதற்கு தென்னாலிராமன் விளக்கம் கொடுத்தான். என்னைக் கொன்றுவிடுவேன் என்று அந்த வித்துவான் ஒரு விரலைக் காட்டினார். உன் கண்ணு இரண்டையும் தோண்டி விடுவேன் என்று நான் இரண்டு விரலைக் காட்டினேன்.

உனக்கு நாமம் போட்டுவிடுவேன் என்று அவர் மூன்று விரலைக் காட்டினார். அதை அழித்து விடுவேன் என்று நான் நான்கு விரலைக் காட்டினேன்.

உன்னை அறைந்து விடுவேன் என்று அவர் ஐந்து விரலைக் காட்டினார். நான் உங்களை குத்தி விடுவேன் என்று முஷ்டியைக் காட்டினேன் என்றான்.

இப்பொழுது பாருங்கள்..ஜெயிச்சது யாரு? தைரியம் மட்டும் இருந்து விட்டால் அதிர்ஷ்டம் தானா தேடி வரும் என்பது எவ்வளவு உண்மையாகப் போய்விட்டது. அதனால் நாம் எப்பொழுது தைரியமாக இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு என் எதிரிலே கதை கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த சின்ன பையனைப் பார்த்தேன். அவன் என்னை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் தன்னுடைய கை–கால் இரண்டையும் ஒரு மாதிரி என் முன்னால் தூக்கி 20 விரலைக் காட்டினான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்கு என்னப்பா அர்த்தம்? என்று கேட்டேன். இதே கதையை, இதற்கு முன்னர் என்னிடம் இருபது தடவை நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள் என்று அர்த்தம் என்றார்.

# ஜனாஸாக்கள் தொடர்பில் இரகசியப் பேச்சு; சர்வதேசம் எம்மைப் பார்த்து நகைக்கிறது

## லக்ஷ்மன் கிரியெல்ல



(கொழும்பு)

கொவிட் தொற்றால் உயிரிழக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பில் இரகசியமாக அரசாங்கம் மாலைதீவுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இதனால் சர்வதேசமே இலங்கையைப் பார்த்து நகைக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்த பிரச்சினையை அரசாங்கம் சர்வதேசத்திற்கு எடுத்துச் சென்றுள்ளமை நாட்டுக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறிருப்பினும் சர்வதேசம் இவ்விடயத்தில் தலையிடுவதற்கு முன்னர் அரசாங்கமே முறையான தீர்மானமொன்றை வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

மரணச்சடங்குகள் , திருமணங்கள் உள்ளிட்டவற்றுக்கு சட்ட விதிகளை விதித்துள்ள அரசாங்கம் , 500 இற்கும் அதிகமான மக்களை ஒன்றிணைத்து கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. அவ்வாறெனில் இறப்பவர்கள் இறக்கட்டும் , நாம் வாழ்வோம் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே அரசாங்கத்தின் போக்கு காணப்படுகிறது.

கொரோனாக் கட்டுப்படுத்தலை மாத்திரமின்றி நாட்டின் நிர்வாகத்தையும் அரசாங்கம் கைவிட்டுள்ளது. அதன் காரணமாகவே ஒவ்வொரு வர்த்தகர்களும் அவரவர் நினைக்கும் விலைகளில் பொருட்களை விற்பனை செய்கிறார்கள். இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள்.

கொவிட் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பில் இன்னும் உரிய தீர்மானமொன்று வழங்கப்படவில்லை. ஆனால் இரகசியமான முறையில் இது குறித்து மாலைதீவுடன் பேசியிருக்கிறார்கள். அதனை அந்நாட்டு முக்கியஸ்தர்களே வெளிப்படுத்திவிட்டனர். இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

இந்த பிரச்சினையை அரசாங்கம் சர்வதேசத்திற்கு எடுத்துச் சென்றுள்ளமை நாட்டுக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேசம் எம்மைப் பார்த்து நகைக்கிறது. எவ்வாறிருப்பினும் சர்வதேசம் இவ்விடயத்தில் தலையிடுவதற்கு முன்னர் அரசாங்கமே முறையான தீர்மானமொன்றை வழங்க வேண்டும்.

இந்த அரசாங்கத்திற்கு இரத்தத்தை பார்க்காமல் இருக்க முடியாது. அதனால் தான் முன்னர் வெலிக்கடை சிறைச்சாலையைப் போன்று தற்போது மகர சிறைச்சாலையில் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் இந்த கைதிகளா முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் நியாயமானது என்பது சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது என அவர் தெரிவித்தார். (நி-4)

# மிக விரைவில் நாட்டிற்கு தடுப்பூசி

(கொழும்பு)

கொவிட்-19 தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டு வருவதை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கொவிட் தடுப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா உள்ளிட்ட பல நாடுகளில் கொவிட் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி பற்றி விரிவாக ஆராய்ந்ததன் பின்னர், குறித்த நாடுகள் மற்றும் இலங்கையின் சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்கவுக்கு இதன்போது அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய குழுக்கள் பற்றி தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். தோட்டங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் விடுதிகள் உட்பட நோய் பரவும் அதிக ஆபத்தில் உள்ள இடங்கள் மற்றும் குழுக்கள் பற்றிய தரவுகளைச் சேகரிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் இந்தக் கலந்துரையாடலின்போது இங்கிலாந்தில் பரவி வரும் கொவிட்-19 புதிய வைரஸின் காரணமாக ஐக்கிய இராச்சியத்திலிருந்து இலங்கைக்குப் பயணிகள் வருவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முடிவு செய்தார்.

இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டு சுகாதாரத் துறையின் முழுமையான கண்காணிப்பின் கீழ் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்கள் மேலும் 14 நாட்களுக்கு தங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

லண்டனில் இருந்து வரும் சரக்கு விமானங்களின் பணிக்குழுவினரும் தனிமைப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுவர் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ள, பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதான, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகாரிகள் மற்றும் கொவிட் குழு உறுப்பினர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2189

### அபி

நீ சொன்னால் எதையும் செய்வேன்
தலையாட்டும் பொம்மையாவேன்...!




கிழிப்பான் அவன் கிழிப்பான் T.V ரிமோட்
கேட்டாலே தரமாட்டான்...!

### அபி

தூக்கம் கண்ணில் வரவில்லை
சொப்பனம் காண வழியில்லை...!




தூக்கம் கண்ணால வராம பின்ன
மூக்காலயா வரும்...!

### லக்மிகா

போன் சூடாக இருக்கும் போதே
நினைச்சேன்டா ....




நீ தான் எடுத்து கேம்
விளையாடியிருப்பாய் என்று...!

### ரதன்

மகள்: ஏன்மா காந்தி தாத்தாவுக்கு முடி இல்லை



தாய்: உண்மை பேசுபவர்களுக்கு முடி இருக்காதாம்
மகள்: அது தான் பெண்களுக்கு நீளமாக
முடி இருக்குதோ...!

### கம்சா

எனக்கென்று பிறந்தவ கண்டிப்பா
இந்த குறூப்பில தான் இருக்கனும்...




நாங்கெல்லாம் உனக்கு தங்கச்சி தான்
இந்த எண்ணத்தோடு இங்க திரியாத..!

### கம்சா

ஒரு பொண்ணுகிட்ட லவ்வ எப்படி சொல்றது
என்று யோசிச்சதை விட...



வேலை செய்யிற இடத்துக்கு லீவு எப்படி
சொல்றது என்று யோசிச்சதுதான் அதிகம்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?



27

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அதனைத் தொடர்ந்து மாற்றம் செய்யப்பட்ட புதிய கொள்கைப் பிரகடனம் மீதான இரண்டாம் நிலை வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சிக்கு சார்பாக 93 வாக்குகளும் அரசுக்கு சார்பாக 61 வாக்குகளும் ஒரு பிரதிநிதி வாக்களிப்பில் பங்குகொள்ளாது காணப்பட அரச கொள்கை பிரகடனத்தின் மூலப் பிரேரணை திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. 1960 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6 ஆம் திகதி டட்லி-சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது.

எனினும், தற்போது கொள்கை பிரகடன அறிக்கைகள் விவாதிக்கப்படுவதோ அல்லது வாக்களிக்கப்படுவதோ இல்லை.

**தற்போது கொள்கை பிரகடன உரைகள்/ அறிக்கைகள் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவோ அல்லது வாக்களிக்கவோ வைக்கப்படுவதில்லை.**

### பாராளுமன்றக் கூட்டத் தொடரை வைபவ ரீதியாக ஆரம்பித்தல்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 70 (1) ஆம் பிரிவின் படி பாராளுமன்றக் கூட்டத்தொடரினை இடைநிறுத்தும் அதிகாரத்தினை ஜனாதிபதி கொண்டுள்ளார். அத்துடன் அரசியல் அமைப்பு 33 (2) இன் பிரகாரம் பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றினதும் ஆரம்பத்திலும் பாராளுமன்றத்தின் அரசாங்கக் கொள்கைக் கூற்றை வாசிப்பதற்கும் பாராளுமன்றத்தின் சடங்கு முறையான இருக்கைகளில் தலைமை தாங்குவதற்கும் அரசியலமைப்பு 33 (2) பிரிவு ஜனாதிக்கு அதிகாரம் வழங்குகின்றது.

ஆளுநர் சேர்.கென்றி மொங்மாசொன் மூரின் தலைமையில் முதலாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரானது வைபவ ரீதியாக 1947 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆளுநரின் சிம்மாசன உரை இடம் பெற்று இது பின்னர் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்களிப்புக்கு விடப்பட்டது.

இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வினை இரண்டாவது எலிசபெத் மகாராணியினால் 1954 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 12 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு மகாராணியினது சிம்மாசன உரை இடம்பெற்றதுடன் இவ்வுரை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அதனைத் தொடர்ந்து முதலாவது அமர்வு வைபவ ரீதியாகவோ அல்லது வைபவ ரீதியற்றோ ஆரம்பிக்கப்பட்டு வந்துள்ளது.

1978 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி புதிய அரசியல் யாப்பு பிரகடனப்படுத்தப்பட்டதன் மூலம் ஜனாதிபதியின் சிம்மாசன உரைக்குப் பதிலாக அரசினது கொள்கைப் பிரகடன அறிக்கை இடம்பெறுகின்றது. தற்போதைய நடைமுறையின்படி இவை விவாதத்திற்கோ வாக்களிப்பிற்கோ எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

### ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு-செலவுத்திட்டம்)

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் என பாராளுமன்ற உறுப்பினர்களால் குறிப்பிடப்படுவது, மிகவும் பிரபல்யமாக வரவு-செலவுத்திட்டம் என அழைக்கப்படுகின்றது. இலங்கைப் பாராளுமன்றத்தின் வருடாந்தக் கலண்டரில், வருடாந்த வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பித்தலும் அதனைத் தொடர்ந்து வரும் விவாதமும், ஓர் ஆண்டில் பாராளுமன்றம் விவாதிக்கும் சட்டவாக்கம், பிரேரணைகள், தீர்மானங்கள் எல்லாவற்றையும் விட முதன்மை பெறுகிறது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிற சட்ட மூலங்களைப் போன்று வரவு-செலவுத் திட்டமும் முதலாம், இரண்டாம், மூன்றாம் மதிப்பீடுகளைக் கொண்டிருக்கின்றது. அது பாராளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்படும் போது மட்டுமே சட்டமாகின்றது.

வரவு-செலவுத்திட்டம் பிற சட்டமூலமொன்றின் நடவடிக்கை முறைகளைப் பின்பற்றினாலும் கூட அது ஒரு சராசரியான நிதிச்சட்டமூலம் அல்ல. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை, கடந்த ஆண்டுகளில் அதன் செயலாற்றுகை, மேலும் அது மேற்கொள்ள எண்ணியுள்ள புதிய திருப்பங்கள் என்பவற்றைப் பற்றி நாட்டுக்கும், உண்மையில் முழு உலகுக்கும், அறிவிப்பதற்கு நிதியமைச்சர் இச்சந்தர்ப்பத்தைப் ப்யன்படுத்துவது ஒரு மரபாகும். எனவே அனைத்து வரி செலுத்துவோருக்கும், வர்த்தக முயற்சியாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் அரச நலன்புரி உதவிகளில் தங்கியிருக்கும் மக்களுக்கும் அது முக்கியமானதாகும்.

### பகிரங்க நிதிகள் மீதான பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகள்

அனைத்து பொது நிதிகள் மீதான பாராளுமன்றத்தின் அடிப்படை அதிகாரங்களும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு - அத்தியாயம் XVII இல் வகுக்கப்பட்டுள்ளது.

**அரசியலமைப்பு உறுப்புரை 148-** ஏதேனும் வரி, வீதவரி அல்லது வேறு அறவீட்டை விதிப்பதற்குக் கருதும் ஏதேனும் ஒரு பொது அதிகாரசபை அல்லது உள்ளூர் அதிகாரசபை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்ட அதிகாரத்தின் கீழ் மட்டுமே அவ்வாறு அறவிட முடியுமென இவ்வுறுப்புரை கூறுகின்றது. எல்லா பகிரங்க நிதிகளும் பாராளுமன்றத்தின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

**அரசியலமைப்பு உறுப்புரை 149** குறித்த ஒரு நோக்கத்துக்காக ஏலவே ஒதுக்கப்படாத பொது நிதிகள், திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படும். அரசுக்குச் செலுத்தப்படும் வரிகள், விதிப்பனவுகள், வீத வரிகள், தீர்வைகள் மற்றும் ஏனைய எல்லா வரவுகளும் வருமானங்களும் குறித்த ஏதேனும் செயற்பாட்டுக்காக ஏலவே ஒதுக்கப்பட்டிராவிடின், திரட்டு நிதியத்தில் சேர்க்கப்படும். திரட்டு நிதியத்திலிருந்து எந்நோக்கங்களுக்காக நிதிகள் பெறப்படலாம் என்பது பற்றிப் பாராளுமன்றம் தீர்மானிக்கலாம். இது பொதுவாகப் பகிரங்கக் கடன் மீதான வட்டி, கடனாழ் நிதியக் கொடுப்பனவுகள் மற்றும் திரட்டு நிதியம் தொடர்பான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

**அரசியலமைப்பு உறுப்புரை 150** குறிப்பிட்ட ஒரு நிதியாண்டில், குறித்ததொரு பொதுச் சேவைக்காக, குறித்ததொரு தொகைப்பணத்தை வழங்குவதற்கான தீர்மானமொன்றை அல்லது சட்டமொன்றை பாராளுமன்றம் நிறைவேற்றியதும், திரட்டு நிதியத்திலிருந்து அரசாங்கம் நிதிகளைப் பெறலாம். பாராளுமன்றம் அதிகாரமளித்தவுடன், நிதியமைச்சரினால் கையொப்பமிடப்பட்ட ஆணையின் பிரகாரம் மட்டுமே குறித்த தொகை மீளப்பெறப்படலாம்.

150 ஆம் உறுப்புரையின் (3) மற்றும் (4) ஆம் பந்திகள் இந்தப் பொதுவான நடைமுறைக்கு இரண்டு விதிவிலக்குகளைத் தருகின்றன.

இது பாராளுமன்றமானது வரவு-செலவுத்திட்டம் மூலமாக நிதியினை ஒதுக்குவதற்கு முன்பாகக் கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் பிரயோகிக்கப்படலாம். அவ்வாறு ஏற்படும் போது, புதிய பாராளுமன்றம் கூடவுள்ள திகதிக்கு முன்னுள்ள 3 மாதங்களுக்கு அரச சேவைகளைப் பராமரிப்பதற்கான செலவுகளுக்கு அனுமதியளிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் ஒன்றிற்கு அழைப்பு விடுக்கும் போது, அதற்கான பணம் ஏற்கனவே பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படாத சந்தர்ப்பத்திலே தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்ததன் பின், திரட்டிய நிதியில் இருந்து நிதியினை வழங்குவதற்கு ஜனாதிபதி அதிகாரமளிக்கலாம்.

**அரசியலமைப்பு உறுப்புரை 151** அவசர மற்றும் எதிர்பாராத செலவுக்காகப் பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் எதிர்பாராத நிகழ்வுகளுக்கான நிதியமொன்றை ஏற்படுத்தலாம். அவசரத் தேவைகளுக்கு என ஏற்கனவே நிதி ஒதுக்கப்படவில்லையென நிதியமைச்சர் திருப்தியடையும் போது, ஜனாதிபதியின் சம்மதத்துடன் இந்நிதியத்திலிருந்து முற்பணக் கொடுப்பனவொன்றை அனுமதிக்கலாம். அதன் பின்னர் இயலுமான அளவு விரைவாக, முற்பணமாக வழங்கப்பட்ட நிதியினை பதிலீடு செய்வதற்கு ஒரு குறைநிரப்பு மதிப்பீடு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

### ஒதுக்கங்கள்

1944 ஆம் ஆண்டின், 16 ஆம் இலக்க நிதி ஒதுக்கீடுகள் சட்டத்தின் மூலம் பொது ஒதுக்கீட்டு அல்லது விசேட ஒதுக்கீட்டு நிதியில் ஒதுக்கப்படாத, வேறு நிதிகளைப் பாராளுமன்றம் வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வகை நிதிகள் பின்னர் பாராளுமன்றத் தீர்மானத்தின் பின்னர் திரட்டிய நிதிக்கு மாற்றப்படலாம்.

**அரசியலமைப்பு உறுப்புரை 154Z** அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மூலமாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபோது, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக குறிப்பிட்ட மாகாண சபைகளுக்கான நிதியினைப் பாராளுமன்றம் அதன் வருடாந்த வரவு- செலவுத் திட்டத்திலிருந்து வழங்கியது. இவ் ஆணைக்குழுவிலே, மத்திய வங்கியின் ஆளுநரும் திறைசேரிச் செயலாளரும் மற்றும் மூன்று பிரதான சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் நிதி, நிர்வாகம், வியாபாரம் அல்லது கல்வி ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களுமான வேறு மூன்று பேரும் அடங்க வேண்டும் என உறுப்புரை 154Z நிபந்தனை விதிக்கிறது.

நிதி ஆணைக்குழுவானது மாகாணங்களின் தேவைகளை மாகாண நிர்வாகத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பிரதான அதிகாரிகளுடன் கலந்துரையாடும். அது, அதன் பரிந்துரைகளுக்கு அடிப்படையாக அமைகின்ற வழிகாட்டல் கோட்பாடுகளை உருவாக்குகின்றது. இதன்போது, உறுப்புரை 154Z (5) இல் குறிப்பிட்டபடி, ஆணைக்குழு, குறிப்பாக சனத்தொகை, தலா வருமானம், ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழித்தல் மற்றும் தலா வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்படும். பின்னர் ஜனாதிபதி அவற்றை பாராளுமன்றத்திற்குத் தெரியப்படுத்துவார்.

அரசாங்கம் இப்பரிந்துரைகளைக் கவனத்திலெடுத்து, ஆணைக் குழுவினுடனான கலந்தாலோசனையுடன், மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்குப் போதுமானதான நிதிகளை வருடாந்த வரவு-செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யும்.

(தொடரும்...)

# மகர கலவரம் 30 இல் இறுதி அறிக்கை



(கொழும்பு)

மகர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழு, அதன் இறுதி அறிக்கையை எதிர்வரும் 30 ஆம் திகதி நீதியமைச்சர் அலி சப்ரியிடம் கையளிக்கவுள்ளது.


இந்தக் குழு கடந்த 7 ஆம் திகதி நீதி அமைச்சருக்கு தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தது.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி குசல சரோஜினி வீரவர்தன தலைமையிலான இந்த குழு ஒரு மாதத்திற்குள் குறுகிய மற்றும் நீண்டகால நடவடிக்கைகளின் பரிந்துரைகளைக் கொண்ட விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குழுவின் உறுப்பினர்கள் மகர சிறைச்சாலையின் கைதிகள், சிறை அதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்டவர்களின் வாக்கு மூலங்களின் அடிப்படையில் பல சந்தர்ப்பங்களில் அறிக்கைகளை பதிவு செய்துள்ளன.

மகர சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைகளின் போது 11 கைதிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## திருநீறு ஏன் பூச வேண்டும்?

இப்பொழுதெல்லாம் பெரும்பாலானவர்கள் தினமும் திருநீறு பூசிக் கொள்வதில்லை. ஆலயங்களுக்குச் செல்லும் நாட்கள் தவிர மற்ற நாட்களில் பலரது நெற்றியில் திருநீறைப் பார்க்க முடிவதில்லை.

சிலர் திருநீறு பூசிக் கொள்ள வெட்கப்படுகின்றார்கள் அல்லது தயங்குகிறார்கள். இவற்றை எல்லாம் இன்றே தூக்கி எறிந்து விடுங்கள். உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டுமானால் சிவ சின்னமான திருநீற்றை நெற்றியில் தினமும் பூச வேண்டும்.

இந்துக்களின் புனித சின்னமாக விபூதி எனும் திருநீறு விளங்குகிறது. விபூதி என்பது இறைவன்; வடிவத்தின் அடையாளமாகும். எனவே விபூதி பூசுவதன் மூலம் ஒருவர் இறைவனின் அருளை முழுமையாகப் பெற முடியும்.

சிவ பக்தர்கள் திருநீறு பூசிக் கொள்ளுகின்றார்கள். விஷ்ணு பக்தர்கள் திருமண்ணால் நாமம் போட்டுக் கொள்கின்றார்கள். இந்த இரண்டு அடையாளங்களின் அர்த்தம் ஒன்று தான்.

மனிதன் இறந்த பின்பு சாம்பலாகி விடப் போகிறான் என்பதை விபூதி உணர்த்துகின்றது. மனிதன் இறந்த பிறகு மண்ணோடு மண்ணாகப் போகிறான் என்பதை திருமண் உணர்த்துகிறது.

சிவபெருமான் சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி திரிந்தார் என்ற வரலாற்றை நீங்கள் படித்திருப்பீர்கள். இதைக் கண்ட சிவனடியார்களும் தங்கள் உடம்பு முழுவதும் சாம்பலை பூசிக் கொண்டார்கள். இதில் இருந்து தான் திருநீறு பூசிக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது.

சங்க காலத்தில் ஓம குண்டங்களில் மிஞ்சும் சாம்பலை பூசிக் கொள்ளும் வழக்கம் இருந்தது. இதன் பிறகே பசு மாடு சாணத்தில் இருந்து விபூதி தயாரிக்கும் முறை தோன்றியது. இந்த விபூதி தயாரிக்க சில விபூதிகள் உள்ளன.

அறுகம்புல்லை உண்ணுகின்ற பசு மாட்டின் சாணத்தை சேகரிக்க வேண்டும். பௌர்ணமி, அமாவாசை, அஷ்டமி, சூரிய கிரகண நாள், சந்திர கிரகண நாள் ஆகிய நாட்களில் பசுமாடு போடும் சாணத்தை கீழே விழுந்து விடாமல் தாமரை இலையில் பிடித்து சேகரித்தல் வேண்டும்.

இந்த சாணத்தை சிறு சிறு உருண்டைகளாக்கி வெயிலில் காய வைத்து, உமியினால் மூடி புடம் போட்டு சாம்பலாக எடுக்க வேண்டும். இது தான் உண்மையான திருநீறு. ஆனால் கால ஓட்டத்தில் இதில் சிறு, சிறு மாறுபாடுகள் ஏற்பட்டன. இதனால் திருநீறு நான்கு பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.கல்பம்: நோயற்ற கன்றுகள் கூடிய பசுவின் சாணத்தை எரித்துத் தயாரிப்பது.
2.அணுகல்பம்:காடுகளில் கிடைக்கும் பசு மாட்டு சாணத்தை எரித்துத் தயாரிப்பது.
3.உபகல்பம்: மாட்டுத் தொழுவத்தில் இருந்து சேகரிக்கப்பட்டு எரித்துத் தயாரிப்பது.
4.அகல்பம்: முறைப்படி இல்லாமல் எல்லோரும் சேகரித்த சாணத்தை எரித்துத் தயாரிப்பது.

இதில் முதல் வகைப்படி திருநீறு தயாரிப்பதை நம் முன்னோர்கள் பழக்கமாக வைத்திருந்தனர். வீடுகளில் அரிசிப் பானை இருப்பது போல தூய்மையான, பளீர் வெள்ளை நிற விபூதி வைப்பதற்கு பானை வைத்திருந்தனர். ஆனால் இப்பேராதெல்லாம் அந்த பழக்கம் மறந்து, மறைந்து விட்டது.

சரி, திருநீறு தயாரிக்க நம் முன்னோர்கள் பசு மாடு சாணத்தை ஏன் பயன்படுத்தினார்கள் தெரியுமா?

மாட்டுச் சாணம் என்பது விலை மதிப்பில்லாத மிகச் சிறந்த கிருமி நாசினி. வீட்டுக்குள் கிருமிகள் வந்துவிடக்கூடாது என்பதற்காக வீட்டின் முற்றத்தில் தினமும் சாணநீர் தெளிப்பதை கிராம மக்கள் இப்பொழுதும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இதுமட்டுமன்றி சாணத்தில் ஏராளமான மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. அதனால் தான் விபூதி தயாரிக்க சாணத்தைப் பயன்படுத்துவது வழக்கத்தில் உள்ளது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறியோர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் மேலும் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 5 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேர காலப்பகுதியில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாதுகாப்பு முகக் கவசம் மற்றும் சமூக இடைவெளியினைத் தவிர்த்துச் செயற்பட்டவர்க்ள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-4)

## சிசுக்களை விற்பனை செய்தவருக்கு பிணை

(கொழும்பு)

சிசுக்களைப் பணத்திற்காக விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தலா 2 இலட்சம் ரூபா சரீரப் பிணைகள் இரண்டு மற்றும் பிணை நிபந்தனைகளின் கீழ் சந்தேக நபர் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி சந்தேக நபர் மீண்டும் மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (நி-4)

## 38 ஆயிரத்தைக் கடந்தது தொற்றாளர்களின் எண்ணிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 38 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் 428 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய 392 பேரும் சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய 35 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை, பேலியகொட மீன் சந்தை மற்றும் சிறைச்சாலைகள் ஆகிய கொத்தணிகளுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 34 ஆயிரத்து 381 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் நாடு திரும்பிய ஒருவருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (நி-4)

## குறி தவறிய துப்பாக்கிச் சூடு தாதி படுகாயம்

(கல்முனை)

மட்டக்களப்பு கண்ணகி அம்மன் கோவில் 3 ஆம் குறுக்கு வீதியில் தாதியர் ஒருவர் மீது பறவைகளை சுடும் துப்பாக்கி மூலம் குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் எயார்கண் துப்பாகியைக் கொண்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணியளவில் வீட்டின் மேல்மாடியில் இருந்து மரத்தில் இருந்த வௌவால் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.


இதன்போது சத்தம் கேட்டு எதிர்வீட்டில் இருந்து வெளியில் வந்த தாதி மீது குறி தவறி குண்டு பாய்ந்ததில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து படுகாயமடைந்த தாதி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)




# தளபதியின் சமரசம்



மன்னர் முல்லாவுக்கு ஒரு வீடு ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார். ஆனால் மன்னர் அந்த வீட்டின் மாடிப்பகுதியை ஒரு படைத்தளபதிக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

மாடியில் வசிக்கும் படைத் தளபதியின் மனைவி அடிக்கடி கல் உரலில் மாவு இடிப்பாள். அந்தச் சமயத்தில் கீழ் வீட்டில் இருக்கும் முல்லாவுக்கு பெரிய தொந்தரவாக இருந்தது.

முல்லா இரண்டு மூன்று தடவை படைத்தளபதியைச் சந்தித்து அவர் மனைவியிடம் கொஞ்சம் மெதுவாக மாவு இடிக்குமாறு சொல்லும்படி கேட்டுக் கொண்டார்.

அதற்கு படைத்தளபதியோ முல்லாவிடம், எனக்காக மன்னர் அளித்த வீடு. என் வீட்டில் என் மனைவி எப்படி வேண்டுமானாலும் மாவு இடிப்பாள். அதைக் கேட்பதற்கு நீ யார்? என்று அதட்டி அனுப்பி விட்டார்.

மறுநாள் முல்லா கீழே உள்ள தன் வீட்டுப் பகுதியைக் கடப்பாறையைக் கொண்டு இடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த படைத் தளபதி மாடியில் இருந்து கீழே என்ன செய்கிறாய் என்று கேட்டார்.

கீழ்ப்பக்கம் இருக்கும் என் வீட்டை முற்றிலுமாக இடித்துத் தள்ளி விட்டுப் புதிதாக கட்டத் தீர்மானித்திருக்கிறேன் என்றார் முல்லா.

அதற்கு படைத்தளபதி, முல்லாவிடம் கீழ்வீடு முழுவதையும் இடித்தால் மேல் வீடு என்ன ஆகும் என்று யோசித்தீரா? என்று கோபத்தோடு கேட்டார்.

மேல் வீட்டைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். எனக்குச் சொந்தமான வீட்டை நான் இடிக்கிறேன்.

பதறிப்போன படைத் தளபதி முல்லாவிடம் சமரசம் பேச முற்பட்டார். நாம் இருவரும் ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வதுதான் நல்லது.

நாம் இருவரும் நண்பர்களாக இருப்போம் என்றார் தளபதி. நான் எப்போதுமே யாருக்கும் நண்பன் தான்! என்று கூறிவிட்டு முல்லா சிரித்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?



Pezhetairoi

யுத்தங்கள் எப்பொழுது? எங்கே? எப்படி? என்பதெல்லாம் இவர்கள் எடுக்கின்ற முடிவுகள் தான். பெரும்பாலும் ரகசியமாகவே அவை வைக்கப்பட்டன.

என்ன செய்ய வேண்டும் என்பது பார்மீனியோவுக்குத் தெரிந்துவிடும். அதை வைத்து வீரர்களுக்கு வெறும் உத்தரவை மட்டும் அவ்வப்போது வழங்கிக் கொண்டிருப்பார்.

அப்படி என்ன உத்தரவுகள் வந்து சேரும்? வீரர்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும்? எங்கு செல்ல வேண்டும்? எப்படித் தயாராக வேண்டும்? எப்பொழுது போரை நிறுத்த வேண்டும்? எங்கு குழும வேண்டும்? என்பதற்கான உத்தரவுகள் தான் பெரும்பாலும்.

தகவ்கள் தொடர்பில் அப்படியொரு நேர்த்தி. அதற்கேற்ற அதிகாரக் கட்டமைப்பு. யுத்தம் நெருங்கும் சமயத்தில் மட்டும் எல்லா வீரர்களும் ஓரிடத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

அவர்களுக்கு முறைப்படி தகவல் கொடுக்கப்படும். இதுதான் திட்டம். அதுதான் யுக்தி. இவையெல்லாம் தான் அணுகுமுறைகள்.

சொன்னதை மட்டும் செய்யுங்கள். கவனம். சொன்னதை மட்டுமே கண்டிப்பாகச் செய்யுங்கள். மற்ற விடயங்களை நான் பார்த்துக் கொள்கின்றேன். விடயங்கள் எதுவும் உங்களைத் தாண்டி ஒரு அங்குலம் கூட நகர்ந்து விடக் கூடாது.

களத்தில் இருக்கும் வீரர்கள் முக்கியம். அவர்களுடைய வீரம் முக்கியம். செயல் முக்கியம். ஆனால் அவர்கள் மாத்திரம் முக்கியம் கிடையாது.அவர்களை முறைப்படி இயக்கச் செய்வதற்குத் தேவை தகவல்கள். தகவல் கசிவு என்னும் வார்த்தையே அவர்களுடைய இராணுவ அகராதியில் கிடையாது.

அலெக்சாண்டருக்கு மற்ற எல்லா விடயங்களைக் காட்டிலும் தகவல் தான் பிரதானமான விடயம். நல்ல தகவல். அதுவும் நம்பகமான தகவல் கிடைத்தால் போதும். மனிதர் குஷியாகிவிடுவார்.

தகவல் கொடுத்த வீரர் நிச்சயம் பூர்வ ஜென்மப் புண்ணியம் செய்தவராக உருமாறி விடுவார். பரிசுகள். சொத்துக்கள். பணம். அந்தஸ்து எல்லாம் கிடைக்கும்.

(தொடரும்)

உலகத்தில் நடமாடும் எதிரிகளை மடக்குவது வீர மிக்க செய்கைதான். ஆனால் உள்ளத்தில் நட மாடும் எதிரிகளை மடக்குவதே அதைவிடச் சிறந்த வீரம்! ~ எமிலி டிக்கின்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதிய அரசியலமைப்பும்; ஜெனிவாவும் ஆளுக்கொரு உபயம் வேண்டாம்

இப்போது தமிழ் அரசியல் தரப்புகள் இரண்டு முக்கிய விடயங்களை எதிர்கொண்டுள்ளன.

அதில் ஒன்று ஜெனிவா கூட்டத் தொடரில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைக் கையா ளுதல் என்ற விடயம்.

மற்றையது புதிய அரசியலமைப்புக்கான முன்மொழிவுகளை முன்வைத்தல்.

மேற்குறித்த இரண்டு விடயங்களும் கவனமாகக் கையாளப்பட வேண்டும். அதி லும் ஜெனிவாவைக் கையாளுதல் என்பதில் எங்களின் அணுகுமுறைகளே எங்களுக் கான சாதகத் தன்மையைத் தீர்மானிக்கும்.

ஆகையால் அது விடயத்தில் மிகத் தெளி வான படிமுறைகளை நாம் ஒழுங்குபடுத்து வது அவசியம்.

இதுதவிர, தயாரிக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்புக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் கோரியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தரக் கூடியதும் இலங்கையில் அனைத்து மக் களும் சம உரிமையுடன் வாழக்கூடியதுமான அரசியல் அமைப்பினைத் தோற்றுவிப்பது அவசியமாகும்.

இதை நாம் கூறும்போது, நாங்கள் வழங்கு கின்ற முன்மொழிவுகளை அரசாங்கம் ஏற்கப் போகிறதா என்ன? என்ற கேள்விகள் எழ லாம்.

ஆனால் கேள்விகளைக் கடந்து, நாங் களும் புதிய அரசியலமைப்புக்கான முன் மொழிவுகளை வழங்க வேண்டும் என்பது தான் இங்கு முக்கியமானது.

ஆக, ஜெனிவாவைக் கையாளுதல், புதிய அரசியலமைப்புக்கான முன்மொழிவுகளை தயாரித்தல் என்ற இரு பெரும் விடயங்கள் எம் முன் எழுந்துள்ளபோது, இதனை நாம் எவ்வாறு கையாளப் போகின்றோம் என்பது பற்றிச் சிந்திப்பது கட்டாயமானது.

இங்குதான் தனித் தனியாக உபயம் செய்யாமல் அனைத்துத் தமிழ் அரசியல் தரப்புகளும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

மாறாக மேற்குறித்த இரு விடயங்களை யும் தனித்தனியாகக் கையாளுவது என் றால், அஃது எங்களுக்குள்ளேயே முரண் பாடுகள் இருப்பது உலகுக்குத் தெரிவிக்கப் படும்.

தவிர, தமிழ் மக்களின் உரிமை என்பது தான் இங்கு பிரதானமானது.

ஆகவே, தமிழ் மக்கள் சார்ந்த விடயத்தில் சுய அரசியல் நலன் பற்றி யார் சிந்தித்தாலும் அஃது தமிழினத்துக்குப் பாதகமாக அமையு மேயன்றி வேறில்லை.

எனவே ஜெனிவாவைக் கையாளுதல், புதிய அரசியலமைப்புக்கான முன்மொழிவு களை வழங்குதல் என்ற விடயத்தில் வீக்க துாக்கங்களைப் பாராது, அரசியல் பேதங் களை முன்னிறுத்தாது, எம் தமிழினம் வாழ வேண்டும் என்ற ஒரே இலக்குடன் ஒருமித்துப் பயணிப்பதுதான் எங்களுக்கான விமோ சனத்தை அடையும் பாதையாகும்.

# உடற்கல்வி ஆசிரியர்களின் இடமாற்றம் காலவரையறையுடன் வழங்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உடற் கல்வி ஆசிரியர்களின் இடமாற்றத்தை கால வரையறையுடன் வழங்க நடவடிக்கை எடுத்துள்ள தாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

நேற்றைய தினம் அமைச்சரின் அலுவலகத் துக்கு வருகை தந்திருந்த குறித்த ஆசிரியர்கள் தமக் கான இடமாற்றத்தில் கால வரையறை இடப்படாது இடமாற்றம் வழங்கப்பட் டுள்ளதாகவும் அதில் கால வரையறை இடப்பட்டு தமக்கான இடமாற்றம் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொண்டு தருமாறும் கோரிக்கை விடுத்திருந் தனர்.

அத்துடன் தாங்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல தயாராக இருக்கின்ற போதிலும் காலவரை யறை இடப்படாதுள்ளமை யால் தாம் எதிர்காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் சுட் டிக்காட்டியதுடன் தமது இட மாற்ற கடிதத்தில் இடமாற் றப்படும் திகதியிலிருந்து 4 ஆண்டுகளுக்கான திகதி இடப்பட்டு வழங்க நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும்என்றும்அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா விடம் தெரிவித்திருந்தனர்.

குறித்த கோரிக்கையை அவதானத்தில் கொண்ட அமைச்சர் துறைசார் தரப் பினரின் கவனத்துக்கு கொண்டு சென்று அதற் கான தீர்வை பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-3)

# அரசாங்கத்தின் பொறுப்பை வர்த்தக அமைச்சு நிறைவேற்றி வருகிறது - பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

தேசிய கைத்தொழி லாளர் களை முன்னேற் றுவதற்காக அரசாங்கத் தின் பொறுப்பை வர்த்தக அமைச்சு நிறைவேற்றி வருவதாக வர்த்தக அமைச் சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

உயர்தர கூரைத் தகடு கள் உற்பத்திக்கான "பேட ன்ட்" அனுமதிப் பத்திரம் பெற்றிருப்பவர்களான, ஐ.டீ.ஈ.ஏ. நிறுவனம் தனது உற்பத்தி பொரு ட்களை அரச வர்த்தக பல் நோக்கு கூட்டுத்தாபனம் ஊடாக உள்நாட்டு சந்தை க்கு விநியோகிப்பது சம் பந்தமான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோதே அமைச்சர் மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.

தேசிய உற்பத்தியான இந்த கூரைத் தகடுகளை விநியோகிக்கும் முழுமை யான உரிமையையும் ஏக போகத்தையும் அர சாங்கம் தனதாக்கிக் கொண்டு, உயர் தரத்தில் உற்பத்தி செய்யப்படும் இத்தகைய தேசிய உற் பத்திகளை, வாடிக்கை யாளர்களுக்கு நம்பிக்கை மற்றும் நியாய விலைக் கொள்கையினடிப்படை யில் விநியோகிப்பதற்காக அரச பல்நோக்கு கூட்டுத் தாபனத்துடன் இணை ந்து செயற்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.(நி-4)

# இந்து பெண் தெய்வத்தினை இழிவாக சித்தரித்து முகநூலில் பதிவு

## சிலாபத்தை சேர்ந்த பெண்ணுக்கு எதிராக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(குப்பிழான்)

இந்து சமய மக்களின் பெண் வழிபாட்டுத் தெய்வ மான காளி அம்மனை இழிவாகச் சித்தரித்து தனது முகநூலில் பதி விட்ட பெண்ணுக்கு எதி ராக அகில இலங்கை இந்து மகா சபாவின் உடுவில் பிரதேச ஒருங்கிணைப் பாளர் சசிகாந் என்பவர் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்து ரையாடிய பின்னர் மேற் படி முறைப்பாடு வழங்கப் பட்டுள்ளது.

இதேவேளை, இந்து சமயப் பெண் தெய்வமான காளியம்மனை அவமதிக் கும் வகையிலும் இந்து சமயத்தையும் பெண் களையும் அவமதிக்கும் வகையிலும் சிலாபத்தைச் சேர்ந்த பெண் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது முகநூலில் பதிவிட் டிருந்தார்.

அதற்கு எதிராகவே குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.(ம-3,18)

# சிதம்பர தரிசனம்

ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.24) திருவெம்பாவை 4ஆம் நாள்

### காலனை காலால் உதைத்தவன் தரிசனம் காண்போம்

ஈழத்துச் சிதம்பரத்தில் தரிசனம் கண்டாலே
இறை யருள் பெருக்கி இன்பமாய் வாழலாம்
நீள நினைந்து சௌந்தராம்பிகை சுந்தரேசனைத் தொழ
நினைத்தவை யாவும் நிறைவேறும் பாரீர்
காலனை காலால் உதைத்தவனின் கோலத்தைக் காண
காலம் முழுவதும் செய்த பாவம் விட்டகலும்
நாளும் நலம் செய்யும் திண்ணபுரத்தானைத் தொழ
நல்லன யாவும் நம்மைச் சேரும் பாரீர்

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

# சத்திய தரிசனம்

## பக்தி எப்போதும் இருக்கட்டும்



❖ இதயத்தைக் கவனி. அது சொல்லும் சொல், செயல், சிந்தனை, நடத்தை ஆகியவற்றையும் கவனி.

❖ ஆசிரியர் சொல்வதைப் பின்பற்று. தீமையை எதிர்கொள். இறுதி வரை போராடு. வாழ்க்கை விளையாட்டை ரசித்து முடி.

❖ வாழ்க்கை என்பது நேசித்தல், கவனித்தல், வளர்ச்சி பெறுதல், கற்றுக்கொள்ளுதல் இவையனைத்தும் சேர்ந்ததாகும்.

❖ நீங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்கள். நீங்கள் எல்லோரும் அன்பு என்னும் மதத்தால் கட்டப்பட்டிருக்கிறீர்கள்.

❖ பிறரிடம் உள்ள தீயவற்றைத் தேடி அலையாதீர்கள். அம்முயற்சியே உங்களைக் கறைபடியச் செய்து விடும்.

❖ பக்தி என்பது குறிப்பிட்ட நேரத்தில் அணியும் சீருடை போன்றதல்ல. அது, எப்போதும் உங்களிடம் இருத்தல் வேண்டும்.

❖ கடவுள் கொடுப்பதை அழிக்கமுடியாது. மனிதன் கொடுப்பதை பாதுகாக்கமுடியாது.

# டோனியின் அடுத்த வருட ஐ.பி.எல் திட்டத்திற்கு கங்குலி தடை?



சென்னை அணிக்காக அடுத்த வருட ஐ.பி.எல்லில் டோனி வைத்திருந்த மிகப் பெரிய திட்டத்திற்கு தடையாகும் வகையில், கங்குலி அதிரடியான முடிவை எடுத்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் இந்த ஆண்டு நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில், டோனி தலைமையிலான சென்னை அணி அந்தளவிற்கு அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

இதற்கு அணியில் இருக்கும் மூத்த வீரர்களே காரணம் என்று சொல்லப்பட்டது.

இதையடுத்து அடுத்த வருட ஐ.பி.எல்லில் ஒரு புதிய சென்னை அணியை பார்க்கலாம், நிச்சயமாக நான் அடுத்த ஆண்டு விளையாடுவேன் என்று தொடரில் இருந்து வெளியேறுவதற்கு முன் டோனி பேட்டி கொடுத்திருந்தார்.

இதனால் அடுத்தாண்டு, ஒரு இளம் சென்னை அணியைப் பார்க்கலாம் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.

அதற்கு ஏற்ற வகையில், அடுத்தாண்டு இரண்டு புதிய அணிகள் வரவிருப்பதால், மிகப் பெரிய ஏலம் விடப்படும், அணியில் தக்க வைக்கப்பட்டிருக்கும் வீரர்கள் சிலர் நிறுத்தப்படுவர் என்று கூறப்பட்டது.

இதை அடிப்படையாக வைத்து டோனி, சிறந்த வீரர்களை, குறிப்பாக மும்பை அணியில் இருக்கும் சில வீரர்களை எப்படியாவது எடுத்துவிட வேண்டும் என்று திட்டம் வைத்திருப்பதாக செய்தி வெளியானது.



ஆனால் அதற்கெல்லாம் தடைவிதிக்கும் வகையில், தற்போது பெரிய ஏலம் எதுவும் நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஐ.பி. எல்லில் புதிய அணிகள் இணைக்கப்ப டாது என்றும் 2 புதிய அணிகள் 2022 இல்தான் இணைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முடிவு பி.சி.சி.ஐ தலைவரான கங்குலியின் முடிவு தான் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

# வித்தியாசமான காரணத்திற்காக நிறுத்தப்பட்ட இருபது-20 போட்டி

நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இருபது- 20 போட்டி நேற்று முன்தினம் வித்தியாசமான காரணத்திற்காக நிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் நடத்தப்பட்டது.

கொரோனா காரணமாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மிகுந்த கட்டுப்பாடுகளுடன் தொடர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இன்னொரு பக்கம் பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரும் நடைபெற்று வருகிறது.

முதல் மற்றும் இரண்டாவது இருபது-20 போட்டிகளில் நியூசிலாந்து வென்றிருந்த நிலையில் நேற்று முன்தினம் இருபது-20 போட்டி நடைபெற்றது.

இந்நிலையில் இந்தப் போட்டி, பாதியில் நிறுத்தப்பட்டது. இதற்கு அதிக சூரிய ஒளி காரணமாக கூறப்பட்டது.

நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது சூரிய ஒளி சுட்டு எரித்தது.

வெளிச்சம் அதிகமாக இருந்ததால் துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட வீரர்கள் பந்தை பார்க்க முடியாமல் அவதிப்பட்டனர்.

அதேபோல் களத்தடுப்பிலும் பந்தை பிடிக்க முடியாமலும் காணப்பட்டனர். இதனால் மைதானத்தில் இரண்டு அணி வீரர்களும் திணறினர்.

இதையடுத்து அதிக சூரிய ஒளி காரணமாக 11.4 ஓவரில் போட்டி நிறுத்தப்பட்டது. பின் சூரிய வெளிச்சம் குறைந்ததும் போட்டி மீண்டும் தொடங்கப்பட்டது.

பொதுவாக மழை காரணமாக போட்டி தடைப்படும். ஆனால் நியூசிலாந்து நேப்பியர் மைதானத்தில் மட்டுமே வெயில் காரணமாக போட்டிகள் தடைப்பட்டன.

கடந்த வருடமும் இந்தியா நியூசிலாந்து இடையிலான போட்டி வெயில் காரணமாக ஒரு ஓவர் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (4)

# எவருக்கும் தொற்றில்லை

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் களமிறங்க வுள்ள தமது அணியின் எந்த வீரர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாகவில்லை என தென்னாபிரிக்க கிரிக்கெட் நிர்வாகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.


இலங்கை கிரிக்கெட் அணியானது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் கீழ் இரு போட்டிகளில் விளையாடுவதற்காக தென்னா பிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் நடந்த புதிய சுற்றுச் சோதனைகளுக்குப் பின்னர், இலங்கையுடன் மோதவுள்ள தென்னாபிரிக்க அணியில் இரு வீரர்கள் கொரோனா வைரஸ்க்கு சாதகமாக சோதனை செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அவர்கள் தொடரிலிருந்து விலக்கப்பட்டு மாற்று வீரர்கள் அணியில் உள்வாங்கப்பட்டனர்.

தென்னாபிரிக்க அணியின் அனைத்து உறுப்பினர்களும் கடந்த வெள்ளிக்கிழமை உயிர் பாதுகாப்பு சூழலுக்குள் நுழைந்து 20 ஆம் திகதி மூன்றாவது சோதனைக் உட்படுத்தப்பட்டனர். அந்த சோதனை முடிவுகளிலேயே எவரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகவில்லை என்று நிரூபணமாகியுள்ளது. (4)

# கோலிக்கு ஸ்மித் வாழ்த்து



குழந்தை பிறந்து எல்லாம் நல்லபடியாக நடக்கும். எனது வாழ்த்துகளை உங்களது மனைவியிடம் சொல்லிவிடுங்கள் என இந்திய அணியின் தலைவர் விராட் கோலிக்கு அவுஸ்திரேலிய அணி வீரர் ஸ்மித் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "விராட் கோலி எஞ்சிய 3 டெஸ்டுகளில் விளையாடாதது இந்திய அணிக்கு பெரிய இழப்பாகும். முதலாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் அவர் துடுப்பெடுத்தாடியது அருமையாக இருந்தது.

அந்த டெஸ்ட் முடிந்து அவரை களத்தில் சந்தித்த போது, 'பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளுங்கள். குழந்தை பிறந்து எல்லாம் நல்லபடியாக நடக்கும். எனது வாழ்த்துகளை உங்களது மனைவியிடம் சொல்லிவிடுங்கள்' என்று அவரிடம் கூறினேன் என தெரிவித்தார். (4)

# பிரபல தமிழ் வர்ணனையாளர் அப்துல் ஜப்பார் காலமானார்



பிரபல கிரிக்கெட் தமிழ் வர்ணனையாளர் அப்துல் ஜப்பார் உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் காலமானார்.


சாத்தான் குளத்தைச் சேர்ந்த அப்துல் ஜப்பாரின் தமிழ் வர்ணனைக்கு உலகம் முழுக்க ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

வானொலியில் தமிழ் நாடு - கேரளா ஆகிய அணிகளுக்கு இடையிலான ரஞ்சி போட்டியில் அப்துல் ஜப்பார் முதல்முறையாக வர்ணனை செய்தார்.

வானொலியில் அவரது வர்ணனையை கேட்ட பலரும் அவரது குரலுக்கு அடிமையாகினர். அதன் பின்னர் ஈ.எஸ்.பின், நியோ ஸ்போர்ட்ஸ் போன்ற விளையாட்டுத் தொலைக்காட்சிகளிலும் தமிழ் வர்ணனை செய்துள்ளார்.

இந்நிலையில் அவர் உடல் நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 81. அவரது மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (4)

# அதிக தொகைக்கு ஏலம்போன தொப்பி



கிரிக்கெட் உலகின் முதல் ஜாம்பவானாக போற்றப்படும் டொன் பிரட்மனின் பச்சை நிற டெஸ்ட் போட்டி தொப்பியை அவுஸ்திரேலிய வர்த்தகர் ஒருவர் இந்திய மதிப்பில் இரண்டரை கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்துள்ளார்.

குறித்த தொப்பியை 1928 ஆம் ஆண்டு தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் பிரட்மன் பயன்படுத்தினார்.

1928 முதல் 1948 வரை அவுஸ்திரேலிய அணிக்காக 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அவர் உலகின் சிறந்த கிரிக்கெட் வீரராக புகழப்பட்டார்.

கிரிக்கெட் வரலாற்றில் இரண்டாவது அதிக தொகைக்கு ஏலம் போனது இந்த தொப்பியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## 25 வயது...

பீட ஆய்வுகூடத்தில் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ம-3,18)

## அரசியல் கைதி...

அனைவரையும் அணிதிரள அரசியல் கைதிகளது குடும்பங்கள் அழைப்பு விடுத்துள்ளன.

தமிழ்த் தலைவர்கள் வெறுமனே கடிதம் எழுதுவதை விடுத்து அரசியல் கைதிகள் விடுதலைக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் குதிக்கவும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அரசியல் கைதிகளது விடுதலைக்காக போராடும் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள் சகிதம் அரசியல் கைதிகளது குடும்பத்தவர்கள் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

குறித்த சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நியூ மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு கொரோனா தொற்றிற்குள்ளாகியுள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சிறையில் உச்சகட்ட பாதுகாப்பின் மத்தியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளிற்கு எவ்வாறு கொரோனா தொற்று ஏற்பட்டதென்பது தெரியவில்லை.

திட்டமிட்டு அது பரப்பப்பட்டதாவென்ற சந்தேகமும் எம்மிடமுள்ளது.

குறிப்பாக கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட அரசியல் கைதிகள் அனைவரும் படையினரது கட்டுப்பாட்டின் கீழுள்ள சிகிச்சை நிலையங்களிற்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது என்றார். (ம-3,33)

## தோற்கடிக்கப்...

யும் தவிசாளரையும் மீளவும் அந்தப் பதவிக்குக் களமிறக்கினால் ஆதரவளிக்க முடியாது என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் திட்டவட்டமாக முடிவெடுத்துள்ளது.

பொருத்தமானவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்தால் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

அதுதொடர்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் இரண்டு சபைகளிலும் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கான கூட்டம் நேற்று மாலை தலைமையினால் நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்தின் நிறைவில் புதியவர்களை களமிறக்கினால் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்று அனைவராலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமது கட்சியைச் சேர்ந்தவர்கள் போட்டியிடமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 9 பேருக்கு...

மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கொத்தணியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட 9 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்மூலம்மருதனார்மடம்கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்ட 13ஆவது நாளில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 104ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் 120 பேருக்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 481 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டன.

இதன்போது வடக்கில் 10 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவில் 8 பேரும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருமாக 10 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். (ம-3,18)

## மருதனார்மடம்...

தற்பொழுது யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மருதனார்மடம் சந்தைக் கொத்தணியில் ஏற்பட்டுள்ள வைரஸ் தொற்றானது மிகவும் வீரியம் கூடியதாக காணப்படுகின்றது.

எனவே நாம் அனைவரும் சமூகப் பொறுப்புடன் அமைதியாக வீட்டிலிருந்து எமது பண்டிகைகளைக் கொண்டாடுவோம் என்றார் (ம-3)

## பாரவூர்தி சாரதி...

நேற்று கொரோனா வைரஸ் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு தொற்று ஏற்படக் காரணமானவர் என்று கூறப்படும் பாரவூர்திச் சாரதியே நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-3)

## கொரோனாவால்...

உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 184 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நேற்று மாத்திரம் +579 புதிய கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## புதிய பிரேரணை...

ரணை தொடர்பில் பிரிட்டன் தூதுவர் மற்றும் ஐ.நா பிரதிநிதியுடன் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பில் நேற்று பேச்சு நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் சுமந்திரன் எம்.பி தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணை கொண்டு வரப்படும்.

அதன் உள்ளடக்கம் மற்றும் அதற்கான ஆதரவுத் தளம் என்பன தொடர்பில் ஜனவரி மாதம் தீர்மானிக்கப்படும் என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் வாக்குறுதி வழங்கியதாக தெரிவித்தார். (ம-3)

## இறுதிச் சடங்கு...

முக்கியமான விடயத்தில், நாட்டின் அனைத்து சமூகங்களுடனும் கலந்துரையாடிய பின்னரே தீர்மானம் எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களை தகனம் செய்யலாமா? அல்லது அடக்கம் செய்யலாமா? என்பதை தீர்மானிப்பது மக்களின் உரிமை என்றும், இந்த விடயத்தில்ஒருமுடிவை எடுப்பதற்கு முன்னர் பௌத்த, இந்து மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்களுடன் அரசாங்கம் ஆலோசித்திருக்க வேண்டும் என்றும்முன்னாள் பிரதமர் கூறினார்.

ஐ.தே.கவின் செயற்குழு கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய முன்னாள் பிரதமர் விக்கிரமசிங்க, ஐ.தே.க எப்போதும் மத சமூகங்களிடையே ஒற்றுமையை வளர்த்து வருவதாகவும், எனவே பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் கலந்துரையாடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும் கூறினார். (ம-3)

# இனங்களை இலக்கு வைப்பதை அனுமதியோம்

## சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

இனங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், அனைத்து இன மக்களதும் மத உரிமைகளை பாதுகாப்பதன் மூலமே நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொரோனா தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று பொரளையில் நடத்தப்பட்ட அமைதிப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மெகா பவர்
திகதி 23/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0712
E 02 23 73 74 78

மஹஜன சம்பத
திகதி 2020/12/23
சீட்டிழுப்பு இலக்கம் 4345
W 9 1 4 7 2 0

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2640
R 10 40 72 73

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/12/2020 சீட்டிழுப்பு இலக்கம் 1081
D 7 3 1 2 9 7

தன நிதானய
திகதி - 2020.12.23
சீட்டிழுப்பு இலக்கம் - 382
Y 03 13 50 65

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1718
சீட்டிழுப்பு திகதி 23/12/2020
வெற்றி இலக்கங்கள் 27 29 48 55 X
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,127,248
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம் 37
சீட்டிழுப்பு திகதி 23/12/2020 புதன்
வெற்றி இலக்கங்கள் 05 29 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,087,780/=

அத கோடிபதி
கிழமை: புதன்
சீட்டிழுப்பு இல: 1141
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 23.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 92,949,520
வெற்றி இலக்கங்கள் 09 13 27 56 J

சனிதா
கிழமை: புதன்
சீட்டிழுப்பு இல: 3471
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 23.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,262,507
வெற்றி இலக்கங்கள் 33 57 68 74 J


ராசி
சுப்பர் ஜக்பொட் 2,519,099/=
திகதி: 23.12.2020
வெற்றி வாரம்: 3022
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 16 34 42 43 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,306,840

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1315
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 23/12/2020
தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் M 06 21 44 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,501,518

# ஓராண்டு நினைவஞ்சலி

## நினைவலைகள்

அன்னை மடியில் 30 . 06 . 1935



ஆண்டவன் அடியில் 24 . 12 . 2019

அமரர்

## உயர்திரு சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை

திதி : 11.01.2021

அல்லும் பகலும் அயராது பாடுபட்டு
சீரோடு இவ்வுலகில் நாம் வாழ
அயராது உழைத்து
கல்வியொடு செல்வமும் கருத்துடன் எமக்கீந்து
எம் நெஞ்சில் அன்பாய் உறையும் எம் அப்பா
வானகம் இடிந்து வையகம் நனைந்த பொழுது
நீங்கள் வையகம் விட்டகன்று
ஓராண்டு ஆகின்றது அப்பா
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமானவரே அப்பா
இனிய மொழி பேசும் இனிமையானவரே அப்பா
அன்பின் பொக்கிஷமே அப்பா
அமைதியின் இருப்பிடமே அப்பா
கண்ணுக்குள் எமை வைத்து காத்திட்ட
காவலரே எம் அப்பா
நிதமும் மலரும் உங்கள் நினைவுகள்
எம் மனதில் மடியும் வரை தொடரும் அப்பா அப்பா

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-1005)

இல. 740, சிவிக்ஸ் சென்டர்,
வட்டக்கச்சி.

குடும்பத்தினர்.


## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025/=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-899)

## பிரத்தியேக குழு வகுப்புக்கள்

புதிய கல்வியாண்டிற்கான (2021) தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர் களிற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன.

வாரம் 3 வகுப்புகள். வாரம் தோறும் மாதிரி வினாத்தாள் செய்யப்படும். குழு வகுப்பு ஒன்றில் ஐந்து மாணவர்கள் மட்டுமே அனுமதி. (5040)

077 645 2622

## அலுவலக உத்தியோகத்தர், தொழில்நுட்பவியலாளர் வெற்றிடங்கள்

GSHL

இடம் : யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை

### GREEN SOLAR HOLDINGS LANKA (pvt) ltd

எமது நிறுவனம் சோலார் விற்பனை மற்றும் நிறுவலில் முன்னணி வகிக்கும் சூரிய ஆற்றல் நிறுவனமாகும். நாம் இப்போது எமது வணிகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் அலுவலக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப வல்லுனர்களை தேடுகின்றோம்.

**தொழில்நுட்ப வல்லுனர் தகைமைகள்**

- தேசிய தொழில் கல்வி மட்டம் 3/4 (NVQ 3/4) அல்லது அதற்கு சமனான தகைமைகள்.
- குறைந்தது 6 மாதங்கள் சோலார் துறையில் பணிபுரிந்த அனுபவம்.
- சோலார் தொடர்பான தொழிற் பயிற்சி.
- சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல்.
- வேலை அட்டவணைக்கு ஏற்ப வேலை செய்யக்கூடியவராக இருத்தல்.

**அலுவலக உத்தியோகத்தர் தகைமைகள் – (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாத்திரம் )**

- சிறந்த தொடர்பாடல்திறன் - ஆங்கிலம் மொழித்திறனுடையவர் களுக்கு முன்னுரிமை.
- ஆவணங்களை கோப்புக்களாக பராமரித்தல் அனுபவம்.
- வேலை அட்டவணைக்கு ஏற்ப வேலைசெய்யக்கூடியவராக இருத்தல்.

(C-998)

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் 10.01.2021 இற்கு முன்னர் 076 731 9888, 077 254 3996 அல்லது 077 515 8810 ஆகிய தொடர்பு இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

E-mail : greensolarholdinglanka@gmail.com


# நன்றி தெரிவிக்கின்றோம்

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தி முல்லைத்தீவு மாவட்ட மீனவ குடும்பங்களை பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றுமாறு கடந்த 15.12.2020ஆம் திகதி மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தி அன்றிலிருந்து 20.12.2020 வரை தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக முன்னெடுத்திருந்தோம். இதன்போது எமது போராட்டத்துக்கு தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கிய**

- முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்.
- கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம்.
- முல்லைத்தீவு பிரதேச வர்த்தக சங்கம்.
- முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னை கூட்டுறவு சங்க சமாசம்.
- கரைதுறைப்பற்று பிரதேச சபை.
- முல்லைத்தீவு மாவட்ட கரைவலை உரிமையாளர் சங்கம்.
- அனைத்து தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் இவை சார்ந்த அனைத்து ஊடகவியலாளர்கள்.
- ஒட்டுசுட்டான் பிரதேச வர்த்தக சங்கம்.
- தனிநபர் உதவியாக ராஜ் மரக்காலை உரிமையாளர் திரு. ராஜ் அவர்கள்.
- தனி நபர் உதவியாக பண உதவி வழங்கிய இரணைப்பாலை மணி அவர்கள்.
- பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள்.
- மாஞ்சோலை, தண்ணீர் ஊற்று, முள்ளியவளை பிரதேச வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள்.
- புதுக்குடியிருப்பு பிரதேச சபை.
- வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் இணையம்.
- கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.
- கிளிநொச்சி மாவட்ட கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனம்.
- மன்னார் மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம்.
- மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.
- முல்லைத்தீவு மாவட்ட கிளைச் சங்கங்கள், கிராமிய கடற்றொழில் அமைப்புக்கள்.
- கிராம அபிவிருத்தி சங்கங்கள்.
- மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள்.
- தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்.
- அரசியல் பிரமுகர்கள், பொலிஸார், முப்படையினர்.

(C-999)

மேலும் எமது போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி, நாம் பெயர் குறிப்பிட தவறியிருப்பின், எமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிய அனைத்து தரப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களின் சம்மேளனம்
முல்லைத்தீவு மாவட்டம்.

077 948 6247

கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்
முல்லைத்தீவு மாவட்டம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.